

ஓம் சாயி ராம்

சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்திய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

சாயிமார்க்கம்

SAI MARGAM (TAMIL)

மலர் 9 இதழ் 26	ஒரே ஒரு மதம் அது அன்பு எனும் மதம்	ஜனவரி - செப்டெம்பர் 2002

பொருளடக்கம்

01.	ஒரே சிந்தனை	01
02.	அன்பு சொரூபிகளே! ஆத்ம சொரூபிகளே!! ஆனந்த சொரூபிகளே!!!	02
03.	சாயியுடன் ஓர் இறை அனுபவம்	03
04.	ஒற்றுமைக்குப் பிரார்த்திப்போம்	04
05.	இரு கதைகள்	07
06.	சுவாமியின் பாடசாலை நாட்கள்	08
07.	பிரபஞ்சம் ஓர் பல்கலைக்கழகம்	13
08.	பிராணாயாமம்	17
09.	சொர்க்கத்திலிருந்து உபதேசங்கள்	19
10.	வார்த்தை ஒன்றும் பேசாமல் வாசமுள்ள றோசாப்பூவாக இருங்கள்	20
11.	வடமராட்சியில் இளைஞர் சாதனை முகாம்	21
12.	பஞ்ச பூதங்களின் குணங்களும் இயல்புகளும்	22
13.	நவராத்திரியும் ஒரு சிவ வழிபாடே	25
14.	சேவைச் செய்திகள்	26

இலங்கையில் தனிப்பிரதி	ரூபா 25/-
வருட சந்தா (4 பிரதிகள் தபால் செலவு உட்பட)	ரூபா 100/-
வெளிநாடு வருட சந்தா	US டொலர் 10

காசோலை பணக்கட்டளைகளை ஆசிரியருக்கு அனுப்பி வைக்கவும்

தபாற் கந்தோர்: நல்லூர்.

ஆசிரியர்: பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)

துணை ஆசிரியர்கள்: ஸ்ரீ S. R. சரவணபவன், ஸ்ரீ. V .K. சபாரத்தினம்,
ஸ்ரீமதி. சியாமளா ரவீந்திரன்

நிருவாக அலுவலகம்:

"சத்தியம்"
681/2, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

ஒரே சிந்தனை

(இலங்கை சத்திய சாயி நிறுவனத்தின் மத்திய ஆலோசகர் திரு. செ. சிவஞானம் ஐயா அவர்கள்)

பறவை ஒன்று கூண்டில் அடைக்கப் பட்டு இருக்கிறது. வெளியில் எப்போ பறக்கலாம் என்று ஆசைப்படுகிறது. திறந் துவிட்டவுடன் ஆகாசத்தில் ஆனந்தமாகப் பறக்கிறது.

மனிதனும் தானே அமைத்த ஒரு கூண்டில் (சிறையில்) தன் வாழ்க்கையை வாழ்கிறான். பாந்த இடம் உனக்கு இருக்கும்பொழுது நீ ஏன் இப்படி வாழவேண்டும் என்று பகவான் கேட்கிறார். சிறையை உடைத்துக் கொண்டு வெளியே வா. உடைக்கும் வழி நான் சொல்லித் தந்திருக்கின்றேன். பயன்படுத்து என்று அடிக்கடி கூறுகிறார்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து" - "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" - என்ற அருமையான மந்திரத்தை பக்தி சிரத்தையுடன், முழு நம்பிக்கையுடன் உச்சரித்தால், கையில் இருந்த விலங் குகள் எல்லாம் உடைந்து சிதறி உண் மையான ஒரு விடுதலை உணர்வு ஏற் படுவதை அனுபவரீதியாக நாம் காண லாம். "லோகா" முழுவதும் உனது சொந்தமாகி விட்ட ஓர் நிலை. வானம் முழுவதும் கூண்டுப் பறவைக்குச் சொந்த மாகிவிட்ட மாதிரி."நான் எனது" எல்லாம் நீங்கிய நிலை ஒன்றே உள்ளது என்ற விழிப்பு நிலை.

பகவான் பாபா காட்டும் வழி இலகுவானது. இலகுவான படியால் நாம் சிலவேளை அசட்டையும் செய்கிறோம். சொற்களின் கருத்துக்களையும் ஆழமா கச் சிந்திப்பதும் இல்லை.

நல்லதைச் சிந்தி
நல்லதைப் பேசு
நல்லதைச் செய்
நல்லதைப் பார்
நல்லதைக்கேள்

அன்பு செய்
இருதயத்தை விரிவாக்கு
உள்நோக்கி விசாரணை செய்
உனக்குள்ளேயே எல்லாவற்றையும் காண்

முயற்சி செய். உடனே கைகூட வில்லையே என்று மனம் தளராதே.

ஆத்மீகத்தின் சாரம் இதற்குமேல் என்ன இருக்கிறது? இதற்கு மேல் சமய ங்கள் எதைத்தான் போதிக்கின்றன?

கடவுள் எங்கும் வியாபகமாக உள்ளார். இந்தத் தத்துவத்தை அப்பியா சம் செய். அனுபவி.

"இயற்கை ஒரு குரு"

- பாபா

வானம், மலைகள், சூரியன், பறவைகள், மரங்கள், மலர்கள், தேனீக்கள்..... கற்பிக்கும் பாடம் பல உண்டு.

ஆம், பிரபஞ்சம் ஒரு பல்கலைக்கழகம். கலாநிதி. எம். வி. என். மூர்த்தி அவ்கள் கூறும் விடயங்களை .....-..... பக்கங்களில் படிக்கவும்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

அன்பு சொரூபிகளே!
ஆத்ம சொரூபிகளே!!
ஆனந்த சொரூபிகளே!!!

இப்படித்தான் பகவான் எங்களை அழைக்கிறார். எந்த அன்புக்காக, எந்த ஆனந்தத்துக்காக, எந்த தெய்வீகத்திற்காக வாழ்க்கை முழுக்க நாம் அலைந்துகொண்டிருக்கிறோமோ அந்த அன்பு, ஆனந்தம் தெய்வீகம் நாங்கள் தான் என்று அவர் சொல்கிறார். அவர் மட்டுமா? எல்லாப் புனித நூல்களும், எல்லா மகான்களும் அப்படித்தான் சொல்கின்றன. சொல்கின்றார்கள்.

யேசுநாதரிடம் பரம மண்டலம் எங்கே என்று கேட்டபொழுது உனது இதயத்தில் என்றார்.

சுவாமி விவேகானந்தர் சொன்னார்; எனது இலக்கு உண்மையாகவே, ஒரு சில வார்த்தைகளில் சொல்வதானால் மனிதன் தெய்வீகமானவன் என்பதை உணர்த்தி அவன் தனது நாளாந்த வாழ்க்கையில் அதை எப்படி வெளிப்படுத்தலாம் என்று தெரியவைப்பதுதான் என்றார்.

வேதங்கள் எங்களை "அமிர்தஸ்ய புத்ரா" என்கின்றன. அதாவது அமரத்துவமானவர்களே என்கின்றன. பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார நோக்கம் மனிதனின் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவது ஆகும்.

இந்த வைத்திய ஆலயத்தில் உள்ள நடமாடும் தெய்வங்கள் நீங்கள். இது எப்படி? உங்களிடம் வரும் நோயாளியை நோயாளியின் தாய் தந்தையர்களை, கணவன். மனைவிமாரை, பிள்ளைகளை, நெருங்கிய உறவினர்களைக் கேளுங்கள் யார் கடவுளென்று. ஆபத்பாந்தவர்களாக நினைப்பார்கள். அதைச் சரியாகப் புரிந்து கொண்டாலும் சரி, புரியாவிட்டாலும் சரி உங்கள் கடமையை நீங்கள் சரிவரச் செய்யும் பொழுது நீங்கள் தெய்வீகத் திருஉருவங்கள் ஆகின்றீர்கள். கடமையை எப்படிச் சரியாகச் செய்வது நீங்கள் செய்கின்ற கடமையை கடவுள் செய்தால் அவர் எப்படிச் செய்வார் அப்படி நீங்கள் செய்ய வேண்டும். இன்னும் இதைத் தெளிவாகச் சொல்வதானால் கடவுளே நோயாளியாக வந்திருந்தால் நீங்கள் எப்படிச் சேவை செய்வீர்களோ அப்படிச் செய்யவேண்டும்.

அப்படித்தான் கடவுள் வருவதாக மறைநூல்கள் சொல்கின்றன. ஒரு நோயாளியாக, ஒரு பசித்தவனாக, ஒரு ஏழையாக இறைவன் உன்முன்னே வருகிறார்.

நாங்கள் விதைப்பதை நாங்கள் அறுவடை செய்கின்றோம். எல்லாச் செயல்களுக்கும் மறுசெயல், எதிரொலி, பிரதிபலிப்பு இருக்கின்றது. நல்ல செயல்களை, தெளிவாக, பூரண உணர்வோடு அர்ப்பணமாகச் செய்வதானால் அவற்றை அன்பாகச் செய்ய வேண்டும். அதனால் ஒரு தெய்வ அர்ப்பணம் செய்த ஆனந்தம் உண்டாகும்.

இறைவன் கேட்கிறார் "நீ என்னிடம் அன்பை கருணையை எதிர்பார்க்கிறாய். ஆனால் உன்னிடம் அன்பைக் கருணையை எதிர்பார்ப்பவர்களுக்கு நீ அவற்றை எப்படிக் கொடுக்கிறாய்? தன்னுடைய தன்னுடைய நிலையில் ஒவ்வொருவனும் உயர்ந்தவன்தான். தன்னுடைய ஆற்றலுக்குட்பட்ட உதவியை, சேவையை, அன்பை, கருணையை அவன் கொடுப்பதை யாரும் தடுக்க முடியாது. அவனால்தான் அதைக் கூட்டவோ குறைக்கவோ முடியும். அவன் இறைவனுடைய நிலைக்கு தன்னை உயர்த்துவதற்கு கிடைக்கும் சந்தர்ப்பம் அது. அப்படி ஒருவன் தன்னை உயர்த்தும் போது இறைவனின் உறவையும் பெறுகிறான். ஏனெனில் அவன் அன்பின், ஆனந்தத்தின் தெய்வீகத்தின் திருவுருவம் என்று மட்டுமல்லாமல் அவன் அவற்றை அனுபவிக்கிறான்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

என் உளமே புகுந்த அதனால் ○○○○

சாயியுடன் ஓர் இறையனுபவம்.

எனது மூத்த மகன் ரிஷிகேசன் கல்வி கற்பதில் சமர்த்தன். யாழ் பரியோவான் கல்லூரியில் க. பொ. த (உ/த) 1999 கணிதப் பிரிவில் மாணவன். 1999 ஓகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயாராக இருந்தவர். ஆனால் பரீட்சைக்கு இரு தினங்களிருக்கையில் தன்னால் பரீட்சைக்குத் தோற்றமுடியாது என்று மறுத்துவிட்டார். க.பொ.த(சா/த) 1996 பரீட்சையில் ஏழு பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்ற (7D) அவர் க.பொ.த(உ/த) பாடத்திட்டங்களை ஒழுங்காக முழுமையாகப் பூர்த்தி செய்த நிலையிலும் இரு தடவைகளும் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிகழ்வையடுத்து எமது முழுக்குடும்பமுமே கவலையில் ஆழ்ந்தது. இதனால் நானும் எனது மனைவியும் கலந்தாலோசித்து மூன்றாவது தடவையேனும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மகனைக் கொழும்பிற்கு அழைத்துச் செவ்வதெனத் தீர்மானித்தோம். அதன்படி அவரைக் கொழும்பிற்கு அழைத்துச் செல்வதற்கு யாழ் படை அதிகாரிகளிற்கு விண்ணப்பித்து விசேட பாதுகாப்பு அனுமதியையும் பெற்றிருந்தோம்.

குறிப்பிட்டதினம் நான் பயணச்சீட்டு வழங்கும் காரியாலயத்திற்குச் சென்று கப்பல் பயணச்சீட்டைக் கோரிய பொழுது யாழ் செயலக அதிகாரிகள் தவறுதலாக எனக்கு மட்டுமே பயணச்சீட்டை வழங்கினார்கள். இதனால் மனம் வேதனையடைந்த யான் எனது உள்ளக் கொதிப்பினால் யாழ் செயலக அதிகாரிகளுடன் கடுமையாக வாதாடினேன். இவைகள் நடந்தது 2000 ஆண்டு ஒக்டோபர், நவம்பர் மாதங்களிற்கிடைப்பட்ட காலமாகும். அன்றைய தினம் மாலை கவலையோடு வீடு திரும்பினேன். மனச்சோர்வோடு வீடு திரும்பிய நான் அன்றைய இரவு நடுநிசியிலும் நித்திரை வராததால் வீட்டு விளக்குகள் அணைத்த நிலையிலும் பலவிதச் சிந்தனைகளுடன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது ஒரு ஒளிக்கீற்று எமது சுவாமி அறையிலிருந்து வெளிவருவது போல் தோன்றிய பொழுதும் நான் அதை அவ்வளவு கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் சிறிது நேரத்தில் அந் நீலநிற ஒளிக்கீற்று மிகவும் பிரகாசமாகவும் அசைந்து அசைந்து வருவதையும் உணர்ந்தவுடன் நான் மெய்மறந்து எழுந்து நின்று அதை உற்றுநோக்கினேன். அவ்வொளிக்கீற்று எமது விறாந்தையைச் சுற்றிச் சென்று மீண்டும் சுவாமி அறைக்குள் சென்று மறைந்தது. மிகுந்த மனச் சஞ்சலத்துடன் இருந்த எனக்கு இந் நிகழ்வால் தேகத்தில் புல்லரித்தது.

நான் ஓர் ஓய்வுபெற்ற அரசாங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர். எனது மனைவியும் இரு புதல்வர்களும் சாயி பக்தர்கள். கோண்டாவில் சாயி சமித்தியில் சாயி பஜனைகளிலும் கலந்து கொள்பவர்கள். எனது இரு மகன்களும் பாலவிகாஷ் கல்வி பயின்று இறுதித் தேர்விலும் அதிவிசேட சித்தி பெற்றவர்கள். நான் எனது இளமைப்பருவத்தில் கடவுள் நம்பிக்கையற்றவனாக இருந்த பொழுதும் வாழ்க்கையில் பல சோதனைகள் ஏற்பட நாளடைவில் சாயி நூல்களை வாசிப்பதில் ஈடுபாடு கொண்டு கடந்த பத்து வருடங்களளவில் அதன் பிரகாரம் ஓரளவிற்கேனும் நடப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பவன்.

இவை நடந்து சில தினங்களுக்குள் நானும் மகனும் கொழும்பு செய்று 8 மாதங்களளவில் தங்கியிருந்து மகன் பரீட்சைக்குத் தோற்றி நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று (4A) யாழ் மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் எனது இரண்டாவது மகன் சுபகேசன் (யாழ் இந்துக் கல்லூரி) யாழ் மாவட்டத்தில் முதல் முறையாகத் தோற்றி மூன்று பாடங்களிலும் அதி

விசேட சித்திபெற்று யாழ் மாவட்டத்தில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளார்.

எனது இவ் இனிய இறை அனுபவத்தை சாயி பக்தர்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆனந்தமடை கின்றேன்.

தற்பொழுது எனது இரு மகன்களும் மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் துறைக்குத் தகுதிபெற்று பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து உள்ளனர்.

ஓம் சாயிராம்

பரராசசேகரம் பேராயிரவர்
கோண்டாவில்.

ஒற்றுமைக்குப் பிரார்த்திப்போம்

(கௌரவ ஏரொருள் மின்சக்கதி அமைச்சர் கரு ஜயசூரிய அவர்கள் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா வின் பாதக் கமலங்களுக்குக் கோடி நமஸ்காரங்கள்! இந்த மாலைவேளை யில் நாட்டிற்காகவும், சமாதானத்திற் காகவும், பூகல் பிணக்குகள் நீங்கி சுமூகம் ஏற்படுவதற்காகவும் இங்கே பிரார்த்திக்க எனக்கும் எனது பாரியாருக் கும் அரிய வாய்ப்புக் கிடைத்ததையிட்டு ஏற்பாட்டாளர்களுக்கு முதற்கண் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதில் ஒரு விசேஷம் உண்டு. முன்று வாரங்களுக்கு முன்பு பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் ஆசிகளைப் பெறும் அரிய வாய்ப்பு எம்மிருவருக்கும் கிடைத்தது. இந்த நாடு இயல்பு நிலைக்கு மெள்ளத் திரும்புகிறது என்று அவர் சொன்னார். எங்களுக்குச் சமாதானம் மெல்ல மெல்ல ஆனால் நிச்சயமாக வரும் என்றார். அது எமக்கு மன ஆறுதலைத் தந்தது.

இது தவிரவும், எங்களை ஒரு ஒழுக்கக் கட்டுப்பாடுடைய நாடாக ஆக்கும்படியும் வேண்டிக் கொண்டோம். இந்த நாட்டிலே கட்டுப்பாடு இல்லாமை யினால் அதை விசேஷமாக வேண்டி னேன். நான் பிறந்தது கட்டுக்கோப்பு டைய ஒரு நாட்டில். ஆனால் இன்றைய இளஞ் சந்ததியினரும் இனி வரப்போகும் சந்ததியும் மீண்டும் கட்டுப்பாட்டொழு ங்கை நாட்டில் காணவேண்டும். கட்டுப் பாடு இருந்தால் பொலிஸ் தேவை யில்லை, கண்காணிப்பு தேவையில்லை, புகையிரதங்கள் நேரத்துக்கு ஓடும் தபால் காரர் நேரத்துக்கு வருவார்; மருத்துவ மனைகள் அழுக்கின்றிச் சுத்தமாக இருக் கும்; கழிவுப் பொருட்கள் குவியாது அகற்றப்படும். உங்கள் வாழ்க்கை எல்லா வகையிலும் இயல்பாக நடைபெறும். இது காரணமாகவே ஒழுக்கக் கட்டுப்பாடு வேண்டும் என்று பிரார்த்திக்க எண்ணங் கொண்டேன்.

அத்தோடு நீதி வழுவாத ஒரு சமூகத்தையும் வேண்டிப் பிரார்த்தித்தேன். பணக்காரன், ஏழை; அதிகாரம் படைத்த வன். அது இல்லாதவன் அனைவரையும் சரிசமமாக நடத்தும் சமூகம் வேண்டும். இந்த நாட்டுக்குச் சுவாமியின் ஆசீர்வாத ங்கள் தேவை. அதனாலேயே நானும் எனது பாரியாரும் சுவாமியின் அடியார்க ளாக இங்கே வந்துள்ளோம்.

நவம்பர் மாதத்தில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவின் போது பகவான் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலி யுறுத்தினார். தூய்மை வேண்டின் ஒற்றுமை நிலவவேண்டும். தூய்மையின் வழியும் ஒற்றுமை வரும். பேசும் பேச்சுக்கெல் லாம் இணங்கிப் போக இயலாது. ஆனால் இணக்கமாகப் பேசலாம். பெற்றோரை எவரும் தேர்ந்தெடுப்ப தில்லை. இனமும், மதமும் எதிர்பாராது ஒருத்தரின் பிறப்போடு வருகின்றது. நாட்டிலே ஒழுங்கு முறையை வேண்டு

வது காலத்தின் தேவையாகும். அது ஒருவரின் வீட்டிலே ஆரம்பமாக வேண்டும். நித்தம் சமயத்தை அனுஷ்டித்து நன்னெறிகளை வளர்த்துக் காக்க வேண்டும். குறிப்பாக இளையர்களான ஆண்களும் பெண்களும் ஒழுக்க நெறிகளைப் பின்பற்ற வேண்டும். வாழ்க்கை என்றால் என்ன, அதன் இலக்கு என்ன என்பது பற்றி தற்காலத்திய இளைஞர்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை.

சமயப் பற்றுடைய சுவாமியின் பக்தர்களான இளவயதினர் கோவிலுக்கு, கிறிஸ்தவ ஆலயத்துக்கு, பள்ளிவாசலுக்கு ஒழுங்காகச் செல்பவர்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுடையவர்களாயிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. எங்கள் பிரார்த்தனையில் விசேஷமாக நாங்கள் வேண்டுவது இளம் உள்ளங்கள் சீர்படுத்தப்படவேண்டும் என்பதும், சுற்றிலும் நாம் காணும் பொல்லாங்குகளிலிருந்து அவர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதுமாகும்.

சிறு குழந்தைகளைப் பொறுத்த மட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மிக அவதானமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய மேம்பாட்டுப் பண்புகள் உறுதிபட எடுத்துச் சொல்லப்படவேண்டும். ஞாயிறு பள்ளிகளுக்கு (சமயக் கல்வி) அவர்களை அனுப்பி வைப்பதும் அவசியம்.

நாங்கள் பங்குபற்றிய ஒரு திருமண வைபவத்தில் மணப்பெண்ணின் தோழியாக வந்த எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி மேடையிலே ஏறி காதலைச் சித்தரிக்கும் பாட்டொன்றைப் பாடத் தொடங்கினாள். நாங்கள் திகைத்து நின்றோம். நம்பவே முடியவில்லை. எங்களுடைய காலத்திலென்றால் ஒரு கதையை அல்லது ஒரு குழந்தைப் பாடலைப் பாடியிருப்போம். காலம் புரண்டு விட்டது. பிள்ளைகளின் கல்வி குறித்துப் பெற்றோர் நினைவும் விழிப்புமாக இருக்க வேண்டியிருக்கின்றது. இல்லையேல் ஒழுக்கங்கெட்ட ஒரு கூட்டத்தினரை வளர்த்தெடுத்துவிடுவோம். அதனால் நாடும் சமூகமும் கேடையும்.

மனமானது முறுகல்கள், குழப்பங்கள், ஆசைகளின் கலவையாகும். மனிதனின் சுயஇயல்பை ஆசைகள் மறைக்கின்றன. உள்ளத்தைத் தூயதாக்கவே பிரதானமாய் ஒருத்தர் ஆத்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தூய உள்ளம் படைத்திருக்கும் போதுதான் தன்னை ஒரு மனிதன் என்று சொல்வதற்கு அருகதை உண்டாகும். காலத்தின் கோளாறினால் மனம் தடம்புரளுகின்றது. ஆத்மீகம் மிருகத்தன்மைகளை விட்டொழித்து உள்ளுறையும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதாகும். ஆனால் தற்காலத்திய கல்விமுறை மனிதத் தன்மையை மனிதனிடமிருந்து பறித்துக்கொண்டுவிட்டது.

வெள்ளைத்துணி போன்றதல்ல மனம் என்கிறார் பகவான். இந்த உலகத்தில் மனிதன் கண்டது, உரைத்தது அனைத்தும் மனதில் பதிந்துள்ளன. பூர்வஜென்ம செய்கைகள், தாக்கங்களின் சுவடும் உள்ளது. சமூக நலனை மனதில் கொண்டு ஒருத்தர் தன் நடத்தையை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அவருடைய நலன் சமூக நலனோடு பிணைந்துள்ளது. சத்தியத்தை மறந்துவிட்டதே இன்று இந்த உலகில் குழப்பமும், கொந்தளிப்பும் நிலவக் காரணமாகும். சத்தியமும், நல்லொழுக்கமும் இரட்டைப் பிறவிகள்.

'Ding Dong Bell; Pusy's in the well' என்றும் 'Baa Baa Black Sheep' என்றும் வெறும் ஓசை நயத்தைச் சொல்லிக் கொடுத்து குழந்தைகளின் கல்வி இன்று ஆரம்பிக்கப்படுகிறது. இந்த அர்த்தமற்ற முறை மாணவர்களை Black Sheep (துரோகம் இழைப்பவர்) ஆகத்தான் மாற்றுகின்றது. ஆண்டவனின் நாமத்தை நாவில் உச்சரித்துக் கல்வியை ஆரம்பிக்க வேண்டும்.

விருட்சங்களை, கற்களை (கற் சிலைகளை), பசுக்களை வழிபடும் எங்களைப் பார்த்து பிற நாட்டவர் வேடிக்கை பேசலாம். ஆனால் அதனடிப்படையில் உயரிய கருத்து ஒன்று உண்டு.

அன்பின் கோட்பாடு தனித்து மனித குலத்துக்கு மட்டும்தான் என்று எல்லை யிட நாங்கள் விரும்பவில்லை. பறவை கள், விலங்குகளோடு கூட அன்பைப் பகிர்ந்து கொள்வதே எமது உள்ளக் கருத்தாகும். பகவான் மீது எல்லோரும் பக்தி கொண்டாடுகிறார்கள். அவர் சக உயிரினங்களில் அன்பாயிருப்பவர்களுக்கு தன் அன்பையும், அருளையும் வழங்கு கிறார்.

பதின்ம வயதடையும் வரை இம் மாதிரி வருந்தத்தக்க நிலை இல்லை. அந்த வயதில் ஆரம்பித்து தர்மத்தை அசட்டை செய்யும் அவர்கள் நான் போகப் போக மிருக இயல்புகளையே பின்பற்றுகிறார்கள். பெரும்பாலானோர் தர்மத்துக்கு நேர்மாறாய் அதர்மத்தில் முற்றிலும் ஆழ்ந்துபோயிருக்கின்ற ஒரு சமுதாயத்தில் நாங்கள் இருக்கின்றோம். நாங்கள் இருக்கின்ற இக்கலியுகத்தில் உலகெங்கும் குற்றச் செயல்கள் மலிந்து போயுள்ளன.

பகவான் பாபா முழு உலகிலும் தர்மம் நிலவும்படிக்கு நல்லவர்களைத் தீங்கிலிருந்து காப்பதோடு ஏனையோரை யும் திருத்தி நேர்வழிக்குக் கொண்டு வருகின்றார். பகவான் ஏதுமொரு சமயத் தைப் போதிக்கவில்லை. எம்முடைய சமயநெறியை நல்லமுறையில் பின்பற்று மாறு வேண்டிக்கொள்கிறார். அவ்வளவே! மத நம்பிக்கைகளை மாற்ற அவர் எத்தனிக்காமையினால் சமூகத்தின் எப் பிரிவினரும் பகவான் பேரில் அச்சங் கொள்ள வேண்டியதில்லை சமயங்கள் அனைத்தின் அடிப்படை சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற மனித குண மேம்பாடுகளே.

உலகில் எல்லாத் தீமைகளும் இருந்தபோதிலும் அனேகர் தார்மீக வழி செல்வதற்கே தங்களால் இயன்றவரை முயல்கிறார்கள். ஆகவே பகவான் பற்பல அருளுரைகளில் குறிப்பிட்டுப் பேசும் பொற்காலம் முழுச்சிறப்பபோடு அதி விரைவில் விடியப் போகின்றது. பகவானின் மாட்சியை நேரில் கண்டுணரவும் அப்போதுள்ள ஒரு தார்மீக சமுதாயத்தில் வாழ்ந்து பார்க்கவும் எல்லோருக்கும் ஆயுளைத் தருமாறு பிரார்த்திக்கின்றோம். எமது எதிர்பார்ப் பும் அதுவாகவே இருக்க வேண்டும்.

ஒற்றுமை என்று சொல்கையில் இன ஒற்றுமையை மட்டும் நான் கருதவில்லை. சமய ஒற்றுமை, அரசியல் ஒற்றுமை, எண்ணம் சொல் செயலில் ஒற்றுமை இவற்றையும் கருதுகின்றேன். நாம் ஒன்றுகூடி பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைப் பணிந்து நாங்கள் யாசித்து நிற்கும் சமாதானம் ஒற்றுமையும் ஏற்படுத்தி அருளுமாறு பிரார்த்திப்போ மாக.

ஜெய் சாயிராம்.

சாயி நகைச்சுவை அமுதம்

இரு கதைகள்

[1]

ஒரு சமயம் நாரதர் விஷ்ணுவிடம் சென்றார். புன்முறுவலுடன் விஷ்ணு "நாரதரே! எங்கிருந்து வருகிறீர்" என்று கேட்டார்.

நாரதர் "ஸ்வாமி எனக்கென்ன வீடா, வாசலா, மனைவியா, மக்களா? நான் உலகத்தைச் சுற்றி வருபவன்" என்றார்.

"உலகத்தைச் சுற்றி வருகிறீரா? நல்லது. எனது சிருஷ்டியின் ரகசியத்தைக் கண்டறிந்தீரா?"

"தங்கள் சிருஷ்டியின் ரகசியத்தை நானறிவேன்".

"நான் நல்லதையே படைத்திருக்கின்றேன். எனது சிருஷ்டியில் கெட்டது எதையாவது கண்டீரா?"

நாரதர் யோசித்தார் "ஸ்வாமி மன்னிக்க வேண்டும். கெட்டது ஒன்றைக் கண்டேன்."

"அது என்ன?"

"ஸ்வாமி, மலம், அதனருகே செல்லவே இயலாது. அது வயிற்றுக்குள் இருந்திருக்கிறது. அதைப்பார்க்கவே சகிக்காது கெட்டதான அதை ஏன் படைத்தீர்கள்?"

"அது கெட்டதல்ல; நாளைக்கு அதைக் கேள்".

"இல்லை, ஸ்வாமி நான் செல்லமாட்டேன்."

"இது என் ஆணை. சென்று கேள்".

விஷ்ணுவின் ஆணைப்படி, நாரதர் அதன் அருகில் சென்ற போது, மலம் நாரதரைக் கண்டு, "சீ. நெருங்கி வராதீர்கள், தொலைவுக்குச் செல்லுங்கள்" என்றது.

நாரதர் அதிசயித்தார் "ஏன் இப்படிப் பேசுகிறாய்?"

"ஏன் கூடாது? நான் புனிதமான வன். நான் இதற்கு முன்பு பழமாக, பாலாக, பாயாசமாக, தயிராக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டு இருந்தேன். மனிதனுடன் கூட்டுச் சேர்ந்ததும் இந்த கதியாகிவிட்டேன். மறுபடியும் உன்னுடன் சேர்ந்தால் என்ன கதியாவேனோ"

தவறு சேரும் கூட்டுறவில் உள்ளது. எதுவும் முதலில் கெட்டதாக இல்லை.

[2]

நாம் இரகசியத்தைப் புரிந்து கொள்வதில்லை. ஒரு தந்தைக்கு ஒரே மகன் இருந்தான். அவனைத் தேள் கொட்டியது. வலி தாங்காமல் மகன் அழுதான். தந்தைக்கு மகனிடம் மிகுந்த பிரியம். மருத்துவரிடம் சென்று விஷயத்தைக் கூறினார். மருத்துவர் தேள் கொட்டிய இடத்தில் மருந்தைத் தடவும் படி கூறினார்.

"தேள் எங்கே கொட்டியது" என்று தந்தை மகனைக் கேட்டார்.

"அதோ அந்த மூலையில் இருந்து கொட்டியது" என்றான் மகன்.

உடனே தந்தை அந்த மூலைக்குச் சென்று மருந்தைத் தடவினார்.

இக்கால ஆத்மீகப் பயிற்சி அவ்வாறுள்ளது. துர்க்குணம் எங்கே தொடங்குகிறதோ, அந்த இடத்தை கவனித்து, துர்க்குணத்தை விலக்க வேண்டும். பிறரைக் குறை கூறிக் கொண்டிருக்கின்றாய். பிறரைக் குறை கூறாதே. பிறரிடம் குறையென்பதே இல்லை. குறையனைத்தும் உன்னிடமே. உனது பிரச்சனைகளைத் தீர்வு செய். அதுவே சரியான வழி. உனது உணர்ச்சிகளே இதற்குக் காரணம்.

EDUCARE – எஜுகேர்

சென்ற சாயி மார்க்கம் விசேட இதழில் Educare என்பதை 'எடியூகெயர்' என்று தமிழில் எழுதியிருந்தோம்.

ஆனால் சனாதன சாரதியும், தமிழ் நாட்டு நூல்களும் Educare ஐ 'எஜுகேர்' என்றே எழுதுகின்றன. ஆங்கில உச்சரிப்பில் இதுவே சரியானதாகும்.

மேலும் 'சுந்தரம்' வெளியிட்ட ஸ்ரீ சத்ய சாயி எஜுகேர் என்ற நூலில் Educare ஐ 'உயிரூட்டக் கல்வி' என்று தமிழில் மொழிபெயர்த்திருக் கிறார்கள்.

நிலையான ஒரு மொழியாக்கம் வரும்வரை எஜுகேர் என்பதையே உபயோகிப்பது நல்லது.

சுவாமியின் பாடசாலை நாட்கள்

(தொடர்ச்சி)

சுவாமியின் உரையிலிருந்து தொகுத்தவர்கள்: சாயி சகோதரர் M. சயிதோ சாயி
சகோதரிகள்: K. ஹிரா, D. அனிதா, N. தகாகி

வெளியீடு: கிழக்கு மண்டல சாயி நிறுவனத் தலைவர் ஸ்ரீ நைகோ ஹிரா.

(முன்கதைச்சுருக்கம்: ஈ.எஸ்.எல்.சி வகுப்புவரை புட்டபர்த்தியின் அயலூரான புக்கப்பட்டணத்தில் கல்வி கற்ற ராஜு'வை (பாபாவின் பூர்வ பெயர்) அதன்பின் அண்ணன் சேஷன் ராஜு, தன் மனைவி வழி மாமியாரின் ஊரான கமலாப்பூரில் ஒரு பள்ளியில் சேர்த்து விடுகிறார். மாமியார் வீட்டிலே ராஜு கடுமையாக வேலை வாங்கப்படுகிறான். புஷ்பகிரி என்ற ஊரில் நடைபெறும் விழாவுக்கு சாரணர் குழுவொன்றை அனுப்புவதற்குப் பள்ளியிலே தீர்மானிக்கின்றனர். ராஜு சாரணர் குழுவுக்குத் தலைவனானாலும் சாரணர் சீருடை தயாரிக்க இயலாத கஷ்ட நிலையிலிருந்தான். தன் நிலையை வெளியே சொல்ல விரும்பாத ராஜு சாரணர் பிரயாணம் புறப்படும் சமயத்தில் தனக்கு மோசமான வயிற்று வலி என்று புலம்பி நிலைமையைச் சமாளித்துத் தப்பித்துக் கொள்கின்றான். ஆனாலும் அந்த விழாவைப் பார்க்க விரும்பி தன் பழைய பாடப் புத்தகங்களை விற்கிறான். அவன் கையில் பணத்தைக் கண்ட விட்டுக்கார அம்மாள் தன் வீட்டில் திருடிவிட்டான் என்று குற்றங் கூறி தண்டனையும் கொடுக்கிறார். கையில் பணமின்றி ராஜு ஒன்பது மைல்கள் கால் நடையாகப் புஷ்பகிரி சென்றடைகிறான். அங்கே ஒரு கற்பாறையில் கண்டெடுத்த ஓரணாவை வைத்து தாயக்கட்டை உருட்டும் விளையாட்டில் பங்கு கொண்டு பன்னிரண்டு அணாக்களை வெல்கிறான். அதில் காலணாவுக்கு மூன்று தோசைகளை அன்றிரவு சாப்பிட்டுவிட்டு மீதிச் சில்லறைகளை ஒரு கந்தைத் துணியில் கட்டி மணலில் புதைத்து அதன் மீது தலையை வைத்துப் படுத்து உறங்குகின்றான்).

துணியில் காசைப் போட்டு முடிந்தது. மண்ணுக்குள் அதைப் புதைத்து, அந்த மண்மேட்டில் தலைவைத்துப் படுத்ததுவரை நான் செய்த ஒவ்வொரு செயலையும் யாரோ கவனித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். நான் நித்திரைக்கு போனபிறகு அந்த ஆசாமி மெள்ள வந்து மண்ணைக் கிளறி பணத்தை எடுத்துக் கொண்டு தப்பிப் போய்விட்டான்.

இதற்கு என்னால் எதுவும் செய்ய இயலாது. கையில் பணமில்லை. அதனால் வயிற்றுக்குச் சாப்பாடில்லை. மறுநாள் காலையில் காக்கி உடை தரித்து வந்திருந்த சாரணர் அனைவரையும் கண்டேன். விழாவைப் பார்க்க வந்தவர்களையும் மற்றும் பயணிகளையும் கவனிப்பதற்கு அங்கங்கே அவர்கள் கடமையில் நிறுத்தப்பட்டிருந்தார்கள். மூன்று நாட்கள் நான் உணவில்லாமல் இருந்தேன். மூன்று நாட்களும் எப்படியோ கழிந்தன.

இதனிடையே சாரணர் குழுவோடு வந்திருந்த ரமேஷ் சூட்சுமமாக எப்படியோ அறிந்து கொண்டுவிட்டான். மற்றவர்களின் கண்ணில்படாமல் வந்து என்னைப் பார்க்கத் தொடங்கினான். மற்றவர்கள் அதை அறிவது எனக்கு இஷ்டமிராது என்று அவனுக்குத் தெரியும். அவன் என்னைக் காணவரும்போது ஒரு தோசை அல்லது ஏதும் தின்பண்டம் சாப்பிடுவதற்குக் கொண்டு வந்து தருவான். இப்படியாக புஷ்பகிரியில் கழிந்த நாட்களை அவனும் சமாளித்து விட்டான்.

அந்த நாட்களில் புஷ்பகிரி விழா மிகப் பிரசித்தமானது. விழா முடிந்து விட்டால் நான் வீடு திரும்ப வேண்டியிருந்தது. அங்கே சேஷின் ராஜாவின் மனைவி கர்ப்பமுற்றிருந்தார். வெறுங் கையோடு வீடு போவது தக்கதல்ல. புஷ்பகிரியிலிருந்து என்ன கொண்டு வந்தாய் என்று கேட்பார்கள். அதற்காக ரமேஷிடம் கடன் கேட்டேன். "எனக்குக் கைமாற்றாக ஓரணா தா. வீட்டுக்குப் போனதும் திருப்பித் தந்து விடுகிறேன். நீ தருவது கடனாக இருக்கட்டும். உபகாரமாகத் தரக்கூடாது". புஷ்பகிரியிலிருந்து திரும்பிச் செல்லும்போது ஓரணாவுக்குச் சில பழங்களும், புஷ்பங்களும் வாங்கிச் சென்றேன்.

தொழில் சம்பந்தமான ஏதோ பயிற்சியை முன்னிட்டு சேஷின் ராஜாவுக்கு விடுமுறை கிடைத்திருந்தது. அதைப் பயன்படுத்தி அவர் வீட்டுக்கு வந்திருந்தார். நான் வீட்டை விட்டுப் புஷ்பகிரிக்குப் போயிருந்த எட்டு நாட்களும் ஆற்றிலிருந்து தண்ணீர் பிடித்து வருவதற்கு வீட்டில் ஆட்கள் யாருமில்லை. எட்டு நாட்களாகத் தண்ணீருக்குக் கஷ்டப்பட்டதால் அவர்களுக்கு என்மேல் பொல்லாத கோபம். அதோடு இன்னும் சேர்த்து வீட்டுக்கார அம்மாள் எனக்கெதிராக சேஷின் ராஜாவுக்கு கோள் வேறு முடித்து விட்டிருக்கிறார். தண்ணீர் கொண்டுவர ஆளில்லை. அப்படியிருந்தும் நான் விட்டிலில்லாது போனேன். அதை அவர்களால் பொறுக்க முடியவில்லை. நான் திரும்பிப் போனபோது கடுஞ் சீற்றத்தோடு இருந்தார்கள்.

சேஷின் ராஜா உட்கார்ந்திருந்து ஒரு அளவு கோலால் குறிப்புப் புத்தகத்தில் வரிக்கோடுகள் போட்டுக் கொண்டிருந்தார். அந்த நாட்களில் அளவுகோல் பெரிதாய் நீண்ட தடிபோல் இருக்கும். நான் உள்ளே நுழைகையில் அவர் கையில் அளவுகோல் இருந்தது. கோபத்தில் புழுங்கிக் கொண்டிருந்தவர் நான் வீட்டினுள் கால் வைத்ததும் கோலை ஓங்கி மளார் மளாரென்று கைகளில் அடித்தார். அந்த அடி வரிசையோடு அளவுகோல் பலதுண்டுகளாக ஒடிந்து கீழே விழுந்தது.

இந்நாட்களில் சேஷின் ராஜாவின் மகன் காலமானான். அவன் காலமாதைத் தெரிவிக்கும் தந்தி எங்கள் வீடு சேர்ந்தபோது 'இதன்' தந்தை சில கொள்வனவுகளுக்காக புக்கப்பட்டணம் போயிருந்தார். சிலர் அவரைத் தேடிப் புக்கப்பட்டணம் சென்று இந்த அவசரச் செய்தியைத் தெரிவித்தார்கள். தந்திச் செய்தி சொன்னவர்களைப் புட்டபர்த்திக்குத் திருப்பி அனுப்பிவிட்டு அவர் நேரே கமலாப்பூர் வந்தார்.

வந்த மாத்திரமே என் கை வீக்கத்தைக் கண்டுவிட்டார். "உன் கைக்கு என்ன நடந்தது? ஏன் துணி சுற்றிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டார். நான் உண்மையை மறைத்தேன், "ஏன் கைக்கு என்ன, அப்படியொன்றுமில்லையே. ஒரு சிறு கொப்புளம் போட்டிருக்கின்றது. அதனால் துணி சுற்றிக் கொண்டிருக்கின்றேன்" என்றேன்.

இழவு வீட்டில் சாவகாசமாக அவரோடு யாரும் பேசுவதாயில்லை. இல்லாவிட்டால் பெரிய வாய்க்காரரான அவர் சும்மா விட்டுவிட மாட்டார். என்றாலும் ஊரவர் சிலரைச் சந்தித்திருந்திறார். அக்கம் பக்கத்தவர் கூட அவரிடம் பலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். "ஏன் இங்கே உன் மகனை இருக்கவிட்டிருக்கிறாய்? அவன் படுகிற பாடு என்ன! இரவு பகலாக வேலை வாங்குகிறார்கள். என்ன நினைத்து இங்கே விட்டிருக்கிறாயோ" இதைக் கேட்டதும் உள்ளம் நொந்து அவருக்கு முகம் வாடிவிட்டது. உண்மையை அறிய முடிவெடுத்து ஓர் உபாயத்தைக் கையாண்டார்.

முன்னிரவு எட்டு மணி. நன்றாக இருட்டிவிட்டது. "நான் வெளிக்குப் போகவேண்டும்" என்றார் தந்தை. அந்தக் காலத்தில் வீட்டுக்கு வெளியே லாந்தர் விளக்குகள் இல்லை. நடப்பதை அறிவதற்கு அவர் போட்ட திட்டத்தின் முதற்கட்டம் இது. "நான் ஊர்மனைக்கு வெளியே போக வேண்டும்" என்று ஒரே சொல்லில் சொன்னார்.

ஆனால் அது ஒரு சாட்டு. அப்போது சேஷன் ராஜு என்னைப் பார்த்து "இதோ பார். இருட்டு வேளை அவரோ வயது போனவர். நீ உதவிக்குப் போ. ஒரு விளக்கை எடுத்து வழிகாட்டியபடி அவரோடு போ" என்றார்.

ஒரு லாந்தரைக் கையிலே எடுத்தேன். வீட்டுக்கு அப்பால் யாருமில்லாத இடத்தில் என்னோடு பேசி உண்மையை அறிந்து கொள்ளத் தந்தை திட்டமிடுகிறார் என்பது எனக்குத் தெரியும். அவரோடு கூடச் சென்றேன். கிராமத்தின் எல்லையைத் தாண்டிய போது, "இதோ ஊருக்கு வெளியே வந்துவிட்டோம். இங்கே நீங்கள் உபாதையைத் தீர்த்துக் கொள்ளலாம்" என்று அவருக்குச் சொன்னேன்.

நான் முதுகைக் காட்டித் திரும்பி நிற்க அவர் இடைமறித்தார். "இல்லையில்லை. நான் உன்னோடு பேசவே வந்தேன். உனக்கு என்ன நடந்தது? எங்கே கையைக் காட்டு. இதென்ன கையிலே? நாளெல்லாம் நீ கஷ்டப்படுகிறாயாம். ஒவ்வொரு நாளும் உனக்கு அடி விழுகிறதாம். இந்த நிலைக்கு ஏன் ஆளாகவேண்டும். உனக்குச் சரியென்றால் வா, ஊருக்குப் போவோம். அங்கே சமாளிக்கலாம். கௌரவம் முக்கியமில்லை. இங்கே தங்கியிருந்து நீ இப்படிக் கஷ்ட துன்பங்களுக்கு உள்ளாக வேண்டாம். என்னோடு வா, ஊருக்கே போய்விடுவோம்".

"அது சரியல்ல" என்றேன் "இங்குள்ள சூழ்நிலையில் இப்போது போய்விட்டேனென்றால் நாலு பேர் நாலு விதமாகப் பேசுவார்கள். மூத்த மகனின் மரணத்தினால் குடும்பம் நிலைகுலைந்து போயிருக்கிறது. அவர்கள் துன்பப்படும் போது நாங்கள் இவ்விதம் நடந்துகொள்ளக்கூடாது. நீங்கள் போகவேண்டும் என்றால் புறப்படுவதே நல்லது. நான் அப்புறம் வருகிறேன். எல்லாம் மறந்து பழங்கதையான பின் வருவேன்" இவ்வாறு அவரோடு நயமாகப் பேசினேன்.

அந்த வீட்டில் இருப்பதற்கு இரண்டாம் நாளே அவர் சங்கடப்பட்டார். அவருக்கு அங்கிருந்து போய்விடவேண்டும் என்றிருந்தது. மரணம் குறித்துத் தனது அனுதாபங்களைத் தெரிவித்துவிட்டுப் புட்டபர்த்திக்குத் திரும்பி விட்டார்.

அவர் புறப்படுகிற சமயம் "உன்னிடம் தேவையான உடுப்பு இருக்கிறதா?" என்று என்னைக் கேட்டார். "நிறைய இருக்கிறது. உடுப்பு எதுவும் வேண்டாம்" என்றேன். அவருக்கு அது திருப்தியாயிருந்தது. என்றாலும் வீட்டிற்குப் புறப்படுவதற்குமுன் புடைவைக் கடைக்காரரான கோடே சுப்பண்ணாவைக் கண்டு பேசிவிட்டுத்தான் போயிருக்கிறார். "என் மகன் வந்து புதிதாகத் துணிகேட்டால் வேண்டியதைக் கொடு. நான் வந்து பணம் தருகிறேன்" இப்படிக் கூறிவிட்டு அவர் போய்விட்டார்.

கடைக்கார சுப்பண்ணாவுக்கு நான் கவிதை எழுதி வருகிற சங்கதி முன்பிருந்தே தெரியும். பள்ளிக்கு வந்த அவர் எனக்காகத் தெருவாயிலில் காத்து நிற்பார். "கடையிலே புதிய மருந்தொன்று விற்பனைக்கு வைத்திருக்கின்றேன். அதை விலைப்படுத்த வேண்டும். அந்த மருந்தை விளம்பரப்படுத்தி விற்பதற்கு ஒரு பாட்டு எழுதித் தருவாயா? என்பார்.

அந்த நாட்களில் விளம்பரத்துக்கென உபயோகப்பட்ட பொருள் ஒரு பலகைச் சட்டம் தொங்கும். சிறுவர்கள் கழியைச் சட்டையில் மாட்டிக் கொண்டு விளம்பரப் பாடலைப் பாடியபடி ஊர்வலமாக வருவார்கள். அந்தக் காலத்து விளம்பரப் பாணி அப்படி இருந்தது.

புதிய மருந்தின் பெயர் 'பாலபாஸ்கரன்'. அதன் விளம்பரத்துக்குப் பாடல் எழுதினேன். "இதோ பாலபாஸ்கரன் என்ற புதியதோர் மருந்து. வயிற்று வலியா? வயிற்றோட்டமா? வயிற்றில் கோளாறா? இருக்கவே இருக்கிறது புகழ்பெற்ற நிவாரணியான பாலபாஸ்கரன். ஒரு நொடியில் குணம் கிடைக்கும். பெயர் பெற்ற மருத்துவர் கோபாலசரனின் விசேஷ தயாரிப்பு கோடே சுப்பண்ணாவின் கடையில் விற்பனையாகின்றது. செல்லுங்கள், சென்று வாங்குங்கள்".

இது நான் எழுதிய விளம்பரப் பாடல். பையன்கள் இதைப் பாடினார்கள். மருந்து கிராக்கியாக விற்பனையாயிற்று. இந்தப் பாட்டுப் பாடப்பட்டு வருகையில் கடைக்காரர் பலருக்கும் அதை நான்தான் எழுதிக் கொடுத்தேன் என்பது தெரிய வந்தது. பலரிடம் கிடையாகச் சரக்கு நிறைய இருந்தது. எல்லோரும் என்னைத் தேடிவரத் தொடங்கினார்கள். பண்டங்களின் விபரங்களைத் தந்து அவை குறித்தப் பாடல் எழுதித் தரச் சொல்லி கேட்டார்கள்.

நான் பாடல்கள் எழுதுவதும், இவ்வாறு கடைக்காரர்களுக்குச் சகாயம் செய்வதும் தமையனார் சேஷன் ராஜுவின் காதுக்கு எட்டியது. உடனும் அவர் என்னைக் கூப்பிட்டார். "இது சரிவராது நீ இங்கே நன்றாக பிஸினஸ் பண்ணுகிறாய். உனக்கு இப்போது விடுமுறை காலம். இங்கே உனக்கு ஒரு வேலையும் இல்லை. புட்டபர்த்திக்குப் போய்விடு" என்றார். இந்தக் கவிதை ஊற்று அத்துடன் நின்றுவிடவில்லை. புட்டபர்த்திக்கு வந்து விட்ட பின்பும் கவிதை என்னுள் பொங்கி வந்து கொண்டிருந்தது.

நீங்கள் "சத்தியம் சிவம் சுந்தரம்" படித்திருப்பீர்கள். புட்டபர்த்தியில் கர்ணம் என்பவரைப் பற்றியும், அவரின் இரு மனைவியர் பற்றியும் அதில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஒரு மனைவியின் பெயர் சுப்பம்மா; மற்றவர் பெயர் காலம்மா. இரண்டு மனைவியர் தவிர ரம்வஸ்திரா என்ற விலைமாதின் தொடர்பும் கர்ணத்துக்கு இருந்தது. கிராமத்திலே அவர் ஒரு பணம் படைத்த புள்ளி. அவரிடம் கொட்டிக் கிடந்த செல்வத்தை இவ்வாறு துன்மார்க்க வழிகளில் விரயம் செய்தார்.

நான் கிராமத்துப் பையன்களை ஒன்றுகூட்டிப் பாடல் சொல்லிக் கொடுப்பேன். அந்தப் பாடல்களை ஊரில் அவர்கள் பாடிக்கொண்டு போவார்கள். நான் அவர்களோடு பாடுவதில்லை. பாட்டை இயற்றி அவர்களுக்கு அதைப் பாடச் சொல்லிக் கொடுப்பேன். அவ்வளவுதான்.

பையன்கள் கர்ணத்தின் வீட்டுக்கு முன்பாகப் போவார்கள். அவர் வீட்டு முகப்பில் உட்கார்ந்திருப்பார். அவர்கள் அப்படியே அமர்ந்து கொண்டு சொல்லிக் கொடுத்த பாட்டைப் பாடுவார்கள். பட்டிக்காட்டு மக்களுக்குக் கிராமியச் சொற்களே புரியும். அதனால் ஒரு குறிப்பிட்ட வார்த்தைகள் மட்டும் புரியக்கூடிய வையாயிருந்தன. பெரும்பாலான வார்த்தைகள் விளங்காது.

கர்ணத்தின் முன்பாகப் பாடியது இப்படித்தான். "விலைமாதர் வீடு போய் வீண்பொழுது போக்க வேண்டாம்; பணத்தை வீண் விரயம் செய்ய வேண்டாம். மானமுள்ளோர் உம்மை என்றும் தீண்டார்; கிட்டே அணுகவும் விடமாட்டார். நண்பர்கள் காலிலுள்ள செருப்பு உமக்கு நல்ல பாடம் கற்பிக்க உதவும்.

பையன்கள் பாடுவதன் பொருள் கர்ணத்துக்குப் புரியும். அவர் இடது கை மணிக்கட்டில் கடிகாரம் கட்டியிருப் பார். பட்டினாலான ஆடை உடுத்தியிருப் பார். அந்தக் காலத்தில் பட்டிக்காட்டிலே ஒருத்தர்கைக்குக் கடிகாரம் கட்டியிருந் தால் ஊராருக்கு அது மகா பெரிய விஷயம். கர்ணம் செல்வம் படைத்தவர். அவரின் நடையுடை போக்கிலும் அந்த மிடுக்கு இருந்தது. பையன்களுக்கு நான் சொல்லித் தந்த பாடல்கள் அதை வர்ணித்தன.

"இன்றைய ஆண்களும் பெண்களும் ஏன் இப்படிப் போகிறார்கள்? ஆண்கள் இடது கையில் ஏதோ தோல்வாரைச் சுற்றிக் கொண்டு செருகித் திரிகிறார்கள். பெண்கள் பரம்பரைப் பழக்கமான நெற்றித் திலகத்தை விட்டுப் புறமோகம் கொண்டு போகிறார்கள். இருபாலார் போக்கும் விசித்திரமாக இருக்கிறது. இவர்களுக்கு நடந்தது என்ன? இவர்கள் கொள்ளும் கோலத்தை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை. போகிற போக்கு மரியாதைக்குரியதாயில்லை.

பாடல்களில் கர்ணத்தின் மீசை பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். அவர்

தனது நீண்ட மீசையை ஒட்ட நறுக்கி மூக்குத்திக்கு இடது புறம் கொஞ்சம் வலதுபுறம் கொஞ்சமாக மூக்கடி மட்டத்துக்கு வழித்துவிட்டிருந்தார். அதை அப்போது ஹிட்லர் மீசை என்பார்கள். அந்த மீசை விவகாரம் என் பாடலில் புகுத்தப்பட்டது. அதைக் கேட்டு அவமானமடைந்த அவர் அடுத்த நாளே மீசையை எடுத்துவிட்டார்.

கர்ணம் ஒருநாள் தந்தையை வந்து கண்டு என்னைப் பற்றி முறைப்பாடு செய்யும்வரை இது தொடர்ந்து நடந்தது. "இதெல்லாம் ராஜுவின் வேலைதான். பையன்களைச் சேர்த்து, பாடல்கள் எழுதி, அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து என்னைக் கேலி பண்ணுகிறான். இதை நீ கவனிக்க வேண்டும்" என்றார். ஒன்று சொல்ல வேண்டும். இதன் தந்தை குடும்பத்தில் மற்ற எல்லோர் மீதும் வெடுசுடென்று பாய்வார். ஆனால் என்மீது அப்படிக் கடுமை காட்டியதில்லை. அன்பும் ஆதரவுமாக என்னோடு தாராளமாக இருந்தார்.

அவர் சொன்னார், "ஊரிலே பிறத்தியாரோடு உனக்கு ஏன் இந்த வம்பு. அவர்களைப் பற்றி என்ன பேச்சு உனக்கு? ஏன் பாட்டெழுதவேண்டும்?"

"இந்த விஷயம் எனக்குத் தெரியாது. அந்தப் பாடல்களை நான் பாடுவதில்லை. யாரோ பையன்கள் சிலர் பாடுகிறார்கள்" என்று பதில் சொன்னேன்.

எனது கவித்திறன் புக்கப்பட்ணம் உட்பட எல்லா இடங்களிலும் தெரிய வந்தது. இந்திய சுதந்திரப் போராட்டம் மிகவும் மும்முரமடைந்திருந்த காலம் அது. பட்டி தொட்டியெங்கும் கூட்டங்கள் நடத்திச் சுதந்திர முழக்கம் செய்தார்கள். ஆங்கிலப் பொலிஸ் படை வந்து கூட்டத்தைக் கலைக்கும். நான் நன்றாகப் பாடல்கள் எழுதுவேன் என்பதை அறிந்து புக்கபட்ணத்தைச் சேர்ந்த இரு காங்கிரஸ்காரர்கள் என்னைத்தேடி வந்தார்கள். "இன்றைய நிலவரத்தை எடுத்துக் காட்டி நீ விரும்பியதை எழுது. பாட்டை எப்படி எழுத விரும்பினாலும் சரி அப்படி எழுதித் தா. புக்கப்பட்ணத்தில் நடக்கவிருக்கும் கூட்டத்தில் அதைப் பாடப்போகிறோம்" என்றார்கள்.

கவிதையை எழுதிக் கொடுத்தேன் எனது கவிதையை மட்டுமல்ல என்னையும் புக்கபட்ணம் கூட்டிப் போக வேண்டும் என்று ஏனோ அவர்களுக்கு விருப்பம் உண்டாயிற்று. ஒரு வயசுப் பெண்ணைப் போல் எனக்கு வேஷமிட்டார்கள். எனக்கு ஒரு சேலையைச் சுற்றி உடுத்திவிட்டார்கள். குழந்தையை வளர்த்தும் தொட்டில் ஒன்று சரிக்கட்டி, தொட்டில் குழந்தையென ஒரு ரப்பர் பொம்மையைக் கொண்டு வந்தார்கள். இளம் பெண்ணின் வேஷத்தில் அவர்களின் ஊருக்கு அழைத்துச் செல்லப்பட்ட நான் அங்கே மேடையில் ஏறி நின்று அந்தக் குழந்தைக்குத் தாலாட்டும் பாடினேன்.

"அழாதே செல்வமே அழதே நீ அழுது அடம் பிடித்தால், ஆனந்தமாய் ஆடி வராவிட்டால் உன்னைப் பாரதத்தின் தவச் செல்வன் என்னார்கள்; நாட்டுக்கு நல்ல மகன் என்னார்கள்".

குழந்தையோடு செல்லம் கொஞ்சுவதுபோல் பல கேள்விகள் இருந்தன. "ஏன்டா அழுகிறாய் கண்ணா?" என்று கேள்வி கேட்டுவிட்டு பதில்களும் கொடுக்கப்பட்டன. "கொலை பாதகன் ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தானே, அதற்கு அழுகிறாயா? ரஷ்யர்கள் வழியேதுமின்றித் தவிக்கிறார்கள் என்று அழுகிறாயா? அவர்கள் ஹிட்லரைத் திரும்பி அடிக்க இயலாதவர்கள் என்றா அழுகிறாய்? அப்படியாகாது. நீ அழ வேண்டாம். காலம் கூடிவரும். செஞ்சேனை திருப்பித் தாக்கும். ஹிட்லருக்குப் பதிலுக்குப் பதில் கொடுக்கும். எங்கள் நாட்டிலே ஒற்றுமை இல்லையென்று அழுகிறாயா? நாங்கள் எல்லோரும் ஒன்றுபடும் காலம் வரும். அப்போது எல்லோரும் ஒருமித்து எழுவோம். அதற்கு வழியுண்டு. நீ அழாதே".

மேடையிலே தாலாட்டு நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்தபோது அங்கே பொலிஸார் வந்தனர். பாட்டின் இனிய

சுவையில் லயித்து அவர்களும் பாட ஆரம்பித்தனர். கைத்தாளம் போட்டு ரசித்தனர். அங்கு வந்த தெலுங்கு தெரியாத ஆங்கிலேயர்கள் இசை நயமிக்க நிகழ்ச்சி கண்ணுக்கு விருந்தாய் மேடையிலே நடந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். பாட்டின் உட்பொருளை அறியாமல் அவர்களும் தாளம் தட்டி மகிழ்ந்தார்கள். அன்றைய கூட்டம் மிகப் பெரும் வெற்றியாக அமைந்தது.

பொதுக்கூட்டம் அமோகமாக ஆதரவு பெற்றதனால், அந்தப் பாடலைப் பற்றியும் அதை எழுதிய ராஜுவைப் பற்றியும் எல்லோரும் பேசலானார்கள். ரசனை மிக்க நல்ல பாடலென்று அனைவரும் பாராட்டினார்கள். இந்தச் செய்தி அண்ணன் சேஷன் ராஜுவின் பாடல்களும், ராஜுவுக்கு கிடைத்த பொதுஜன மதிப்பும், அவருக்கு ஒரு விதத்தில் பொறாமையைக் கிளப்பி விட்டன. 'இதை இனி விடக்கூடாது' என்று தனக்குள் முடிவெடுத்துக் கொண்டார். "இனிமேலும் ராஜுவை புட்டபர்த்தியில் விடேலாது. அவனை என்னோடு தான் கூட்டிப் போகவேண்டும்" என்றார். அதன்படி சேஷன் ராஜு தனது வசிப்பிடமான உரவகொண்டாவுக்கு ராஜுவை அழைத்துச் சென்றார்.

(அடுத்த இதழில் முடியும்)

பிரபஞ்சம் ஒரு பல்கலைக்கழகம்

(கலாநிதி எம். வி. என். மூர்த்தி எழுதிய 'The Greatest Adventure' என்ற நூலிலுள்ள 'The universe, a university' என்ற அத்தியாயத்தின் சுருக்கம். ஸ்ரீ. எம். வி. என். மூர்த்தி – என். கஸ்தூரி அவர்களின் புதல்வர். சுருக்கமும் தமிழாக்கமும் V. K. சபாரத்தினம்).

மும்பாயில் நடைபெற்ற ஸ்ரீ சத்திய சாயி கல்வி வட்ட நிகழ்வில் பாபா கூறினார்: "உங்கள் படிப்பை இந்த வட்டத்துக்குள்ளும் இந்த நூல்களுக்குள்ளும் அடக்கி விடக்கூடாது. பிரபஞ்சமே ஒரு பல்கலைக்கழகம். வானம், முகில்கள், மலைகள், ஆறுகள், அன்றாடம் நிகழும் சூரியோதயம், சூரியாஸ்தமனம், பருவ காலங்கள், பறவைகள், மரங்கள், மலர்கள், ஜந்துக்கள் - இவ்வாறு படைப்புப் பொருட்கள், உயிரினங்கள் யாவற்றிடமிருந்தும் நீங்கள் உண்மையில் உயர்ந்த அறிவைப் பெறமுடியும். இந்த ஆசான்களைப் பயபக்தியோடு போற்றி, பணிவடக்கத்தோடு அணுகினால் நமது பாடங்களை எமக்கு அவை புலப்பட வைக்கும்."

புறப்பொருள்களிலிருந்து கற்றுக் கொள்வதற்கு மனிதனுக்கு நிறைய உண்டு என்று பாபா எப்போதும் உறுதிபடச் சொல்லி வருகிறார். அவர் கருத்துப்பிரகாரம் இயற்கையே மனிதனுக்குச் சிறந்த குரு. மௌன மொழியில் நீளமைதி மூலம் இயற்கை பாடம் சொல்லுகின்றது. இயற்கை எமக்குப் பயபக்தியும் வியப்பும் கூட்டி பிரமிப்பைத் தருகின்றது. அதன் முன் எமது குறைவுபாட்டை உணர்ந்து அடக்கம் கொள்கிறோம். இந்த மனநிலையோடு பிரபஞ்சத்து ஆசான்களை அணுகும்போது அவை எமது அகக் கண்ணைத் திறக்கச் செய்து தமது பாடங்களை இதயத்தோடு சொல்லுகின்றன.

பாபா குறிப்பிட்டுச் சொன்ன ஒவ்வொரு இயற்கைக் குருவும் எடுத்துச் சொல்லக்கூடிய போதனையை உன்னுவோம்.

வானம்.

வானம் அகன்றது; அளவிட முடியாத தன்மையது; விண்வெளியாய்

விரிந்து செல்கின்றது. இவ்வெண்ணம் ஒவ்வொரு இரவிலும் எம்முணர்வில் தோன்றுவதாகும். ஒரு விண்மீனைப் பார்க்கும்போது உண்மையில் அண்ட பெரு வெளியில் அது இலட்சக் கணக்கான ஒளி வருடங்களுக்கு அப்பால் இருக்கின்றது என்று எமக்குச் சொல்லிக் கொள்ள வேண்டும். பெரிதாகச் சிந்திக்கும்படி, பார்வையை விசாலமாக்கும்படி தொடுவான எல்லைக்கு அப்பாலும் மனத்தைச் செல்ல விடும்படி நெடுவானம் எமக்குப் போதிக்கின்றது.

மழை பெய்து விட்டதும் புழுதிப் படலம் ஓய்ந்து, மேக மண்டலம் கலைந்து வானம் நீலமாய்த் தெரிகின்றது. மேகக் கூட்டங்களும், புழுதிப் படலங்களும் வான அரங்கில் ஓடியாடி தூள்படுத்தினாலும் வானம் தூயதாய், நீலமாய், மாசுமறுவற்றதாகவே இருக்கின்றது. இவ்விதமே திடீரென்று சுழற்றியடிக்கும் அவர், போபம், மூட்டம் போடும் மனச்சோர்வு ஆகியவற்றினால் நிலை தளம்பாமல் உறுதிபெற்றிருக்க வேண்டும்.

மேகங்கள்.

மேகங்கள் இசை மீட்டி உலாவி வரும் இசைவாணர்கள். இடர் நீக்கும் இரட்சகர்கள். காய்ந்து வரண்ட பூமி தாகத்தோடு வரவை எதிர்பார்த்திருக்கும் விருப்பமான விருந்தாளிகள். நிலப் பரப்புக்குப் புத்துயிரளிக்கவும், இறந்த வற்றையும் இறப்பனவற்றையும் மீள உயிர்த்தெழச் செய்யவும் கடலிலிருந்து தடாகம் தடாகமாக நீரைக் கொணர்கின்றன. மேகங்கள், மாரி காலத்தின் முதல் முகில் கண்ணுக்குத் தரிசனமாகும்போது எத்தனை நன்றி பெருகுகின்றது. விண்ணிலிருந்து தேவாமிர்தத்தை அது கொண்டு வருகிறதல்லவா!.

மேகத்தின் மூலம் ஒரு மாபெரும் பாடத்தைப் படிக்கின்றோம். மேகம் தன்னை முழுதாக ஈந்து, தன் அடையாளத்தை இழந்து ஏதுமற்றுப் போகின்றது. இத் தியாகத்தின் பலனைப் பாருங்கள். பூமி பசுமை பூண்டு பூரிப்படைந்து சிலிர்த்து நிற்கிறது. மேகமோ தன்னையே தியாகம் செய்து பூரணமடைகின்றது. எம்மையும் எமக்குரியதையும் பிறநலனுக்கு ஈவதே உண்மையான நிறைவாகும்.

மாமலைகள்.

கம்பீரமான மலைத்தொடர்களும், சிகரங்களும் எம்முள் உன்னத உணர்வுச் சாயைகளையும், எண்ண ஓட்டங்களையும் எழச் செய்கின்றன. மனத்தை அசத்தும் அவற்றின் உருவப் பரிமாணம், வெற்றி கொள்ள முடியாத முரட்டுத் தன்மை ஆகியன அளவிட முடியாத வலிமையாய் உணர்வில் தோன்றுகின்றன.

மாமலைகள் அறைகூவி அழைக்கின்றன! அவற்றின் கொடுமுடியைத் தொட்டு வரத் தூண்டப்படுகிறோம். அபாயம் நிறைந்த உச்சிக்குச் செல்ல எழுச்சி பிறக்கிறது. அதற்குப் பிரயாசை தேவை. பிரயாசைப்படத் தசைவலு வேண்டும். வகுப்பறைகளிலும், அலுவலகங்களிலும், சமூகப் படித்தரங்களிலும், கல்விப் புலமையிலும் உச்சத்தை அடையத் தூண்டும் தாகத்தை மலைச் சிகரமே உண்டுபண்ணுகின்றது. ஆத்மீக தேடலிலும் சரி உச்சத்துக்கு இட்டுச் செல்வது இத் தூண்டுதலேயாகும்.

ஆறுகள்.

பொங்கிப் புரளும் ஆறு வியக்க வைக்கின்றது, நன்றி உணர்வை மேலிடச் செய்கின்றது. அருவிகளில், ஓடைகளில் துளித் துளியாகக் கூடிப் பிரவகித்து ஓடும் நீரை போகும் வழி நெடுகப் பங்கிடக் கூடியதாய் கொண்டு செல்கிறது நதி. ஒரு சிலர் மட்டும் பயனடைவதில் அதற்குத் திருப்தியில்லை. நிலப் பரப்பைத் தொடுக்கும் கால்வாய் வழிகளாக அமைகின்றன ஆறுகள். அவை நாட்டுக்குச் சுபீட்சத்தையும், களிப்பையும் தரும் ஊற்றுக்களை ஊட்டிப் பேணுகின்றன.

வானத்து முகில்கள் வரையாது வழங்கிவிட்டுப் போக, அந்த ஆனந்தத்தில் துள்ளும் நதிகள் கரை கடந்து பாய்ந்து வருங்காலப் பயிர்களுக்காக அரிய வண்டலை வழங்கிவிட்டுச் செல்

கின்றன. ஆறுகளிடம் நலம் கற்கக் கூடிய பாடங்கள்: ஓயாத ஊக்கம், தாராளத் தன்மை, துள்ளும் குதூகலம், ஆற்றின் கரை மீது அமர்ந்து அதனைப் பார்த்து கொண்டிருத்தலே போதும்.

சூரியோதயம் சூரியஸ்தமனம்.

சூரியோதயமும் சூரியஸ்தமனமும் தினமும் நிகழ்வன. சூரியன் உதிக்கும் அந்தக் கணப்பொழுது ஆற்றல் கொண்டது. அப்போதுதான் கீழ்வானத்தில் மாசு மறுவற்ற, நம்பிக்கை நிறைந்த, பரிசுத்தமான ஒரு புதிய நாள் உதயமாகின்றது. அதன் பின பிறக்கும் ஒவ்வொரு விநாடியும் எம்மெண்ணப்படி கொண்டாடி மகிழவே வருவதாகும்.

அந்திவேளை, "நான் போய் வருகிறேன்" என்று சூரியன் சொல்லிப் பிரியும் ஒப்பற்ற நேரம். பூமிக் கோளம் சுழன்று திரும்ப மறுபாதியிலுள்ள மக்களைத் துயிலெழுப்பி தன் கவனத்துக்கு ஈர்க்கும் வேலை சூரியனுக்கு இருக்கின்றது. சூரியாஸ்தமனம் இரவுக்கு விடுக்கப்படும் அழைப்பு; மற்றும் உன்னத அமைதியோடு விளங்கும் பால்வழி மண்டலங்களுக்கு, பூமியின் உறவுகளான கிரகக் கோளங்களுக்கு, நட்சத்திரங்களுக்கு விடுக்கப்படும் அழைப்புமாகும். சுறுசுறுப்பான பகல் பொழுதில் 'தந்தை' சூரியன் காட்டமாக நின்று புளங்கிவிட்டுப் போக, விண்வெளிக் குடும்பம் ஆறுதலாகச் சந்தித்து ஒருவரோடொருவர் அளவளாவும் நேரம் இதுபோல் தோன்றுகின்றது. நட்சத்திரங்கள் சிமிட்டிச் சிமிட்டிப் பேசுவது இரகசியம். ஆனால் எல்லோர் கவனத்தையும் தன்பால் இழுத்துக் கொள்கிறது சந்திரன்.

பருவ காலங்கள்.

கோடை வரும்போது, "பருவ மழை என்ன தூரமா?" என்பார்கள். மாறும் தன்மை பருவ காலத்தின் அடிப்படை விதி. வருடம் ஒன்றின்போது தொடர்ந்து நிகழும் மாறுதலிலேதான் நம்பிக்கையும், எதிர்பார்ப்புகளும் தங்கியிருக்கின்றன. "எப்புடு உந்தது" என்பார் பாபா. இதுவும் மாறிப் போகும் என்பது பொருள். கோடை வெய்யிலின் வெக்கை கடுமையாக வாட்டும்போது, பூமி சூரியனைச் சுற்றுவதனால், நிவாரண மழை அதிக தூரத்தில் இல்லை என்பதை நினைத்துக் கொள்கிறோம்.

மாரியும் கோடையும் போல் துயரமும், மகிழ்ச்சியும் நிரந்தரமல்ல. வாழ்க்கையைப் பயனுள்ளதாகவும், சுவாரஸ்யமானதாகவும் ஆக்குவது இந்த மாறுதலேயாகும். மாறும் பருவ காலத்தோடு இயற்கையிலும் ஏதேதோ புதுமை நிகழ்கின்றது. மரங்கள் இலையுதிர்க்கின்றன. கையோடு புத்தாடை புனைகின்றன. பூவரும்புகள் பூத்துக் குலுங்குகின்றன. மலர்களைப் பாராட்டி ரசிக்கின்றோம். ஏனெனில் அவை இல்லாத காலமும் இருந்தது. என்றும் வசந்தம் என்றால் மலர்களைப் போற்றுவோர் யார்?

பறவைகள்.

பறவைகளைப் பார்க்கும்போது எவ்வளவு பொறாமையாயிருக்கின்றது. தரையில் சஞ்சரிப்பதில் மனிதன் என்றுமே திருப்திகொண்டதில்லை. காரணம் அவனுடைய பூர்வ இயற்கையாக இருக்கலாம். பரிணாமப் பயணத்தில் மரத்துக்கு மரம் தாவி இருக்கிறான். ஆனால் அதனை எண்ணி ஆனந்திக்க மானிடப் பிறப்பெடுக்க வேண்டியிருந்தது. அதற்கும் நெடுங்காலத்துக்கு முன் அவன் பறக்கக் கூடியவனாக இருந்தான். தற்போது இறகையும் இல்லை, வாலும் இல்லை, பறக்கும் ஆசை மட்டும் இருக்கின்றது. மலையின் உச்சியைத் தொட்டு வரத் தூண்டிய ஆசை அவனைச் சந்திர மண்டலத்துக்கு உந்திச் சென்றிருக்கின்றது. தொடர்ந்து கிரகக் கோள்களிலும் கால் பதிக்க ஆவல் கொண்டு நிற்கின்றான்.

மரங்கள்.

மரங்கள் மகத்தான பாடத்தைச் சொல்லும் போதகர்கள் என்கிறார் பாபா. உற்ற நண்பர்களான அவற்றை மனிதன் எப்படி மறப்பது? பிறர் பொருட்டு தானழியும் அதனை விட மேலாகச் சுயதியாகம் செய்யும் இன்னொன்றை நினைத்துப் பார்க்கவும் முடியுமா? அடி மரத்தை வெட்டினாலும் சரி, கிளை

களைத் தறித்தாலும் சரி, உடலையும் அங்கங்களையும் கூறுபட அரிந்தாலும் சரி, அது எந்த முணுமுணுப்புமின்றி உங்கள் வீட்டு உலைக்கு நெருப்பா கின்றது; குளிர் போக்கி இதமான சூட் டைத் தருகின்றது. சந்தன மரத்தை வெட்டிச் சாய்க்கும் கோடரிக்கே அம்மரம் தன் நறுமணத்தை ஊட்டுகின்றது என்கிறார் பாபா.

உரிய நேரம் வரும்வரை பொறு மையை விரதமாகக் கடைப்பிடிக்கும்படி மரம் சொல்லித் தருகின்றது. பாபா கூறுவதாவது; "ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு என்பது வாசகம். ஒரு பூ மலர்கின்றது. அது காயாகி, நறுஞ்சாறு நிறைந்து கனிவதற்கு நெடு நாட்கள் செல்கின்றன. ஒரு குழந்தை பிறக்கின் றது. அவன் திடகாத்திரனாய் வளர்ந்து புத்திசாலியாய் சமூகத்தில் ஒரு மனித னாவதற்கு நீண்ட காலம் செல்லுகின்றது. ஏற்ற காலத்துக்கு நாங்கள் காத்திருக்க வேண்டும். அதேவேளை மரத்தைப் பாது காத்து வளர்த்தால் மட்டுமே அது பழங்களைத் தரும்.

மலர்கள்.

உய்த்துணர்ந்து கொள்ளக்கூடு மானால் மலர்களும் எமக்கு ஆசான் களாகும். பூத்திருக்கும் மலர்களைப் பார்த்து மகிழாதவர் யார்? இத்தனை எழிலோடு அவை ஏன் மலர்கின்றன என்று நான் வியப்பதுண்டு. வண்ண வண்ணமான அழகு விலாசம்; வெல்வெட் டின் மிருது - இப்படியொரு திவ்விய சௌந்தர்யத்தை மனிதனால் ஆக்க முடியவில்லையே.

இறைவன், தான் போற்றி மகிழ் வதற்கு அத்தனை அழகை மலர்களுக் குப் படைத்தானா? அல்லது அது எமக்கு அவன் பரிந்தளித்த விசேஷ பாக்கியமா? மலர்களைப் போல் நாங்க ளும் கடமை தவறாது, அப்பழுக்கில்லா மல், எளிமையாய் இருந்துவிட்டால் என்ன!.

ஜந்துக்கள்

மனிதருக்குப் பாடம் கற்றுத்தரக் கூடிய குருமார் பட்டியலில் பூச்சிகளையும் பாபா சேர்த்துள்ளார். கொடுத்து வாங்கு தல் என்ற அற்புதமான பாடத்தை தேனீக் களிடமிருந்து கற்கக் கூடியதாயுள்ளது. தேனைச் சேகரிப்பதற்கு தேனீ மலருக்கு மலர் பறந்து செல்கின்றது. தேனை எடுக்கும் தேனீ அதற்குப் பதிலாக மகரந்ததத்தை பூவுக்குப் பூ கொண்டு செல்கிறது. அதனால் விதை உண்டாகி, மரவர்க்கம் அழிந்து போகாமல் காக்கப் படுவதை அதன் செயல் உறுதிசெய்கின் றது.

வரவு வாங்குவதும் மறப்பதும், சுரண்டுவதும், கறப்பதும் மானிட வர்க்கம் உவக்கும் செயல்கள். ஆனால் தேனீக் கள் எடுக்கின்றன. அதேபோல் கொடுக் கின்றன. இயற்கை போதிக்கும் பாடம் இது. நாங்கள் தேனமுதம் பெறவேண்டிப் பாடுபட வேண்டும். பதிலாக சேவைகளை, உதவிகளை நல்க வேண்டும். "ஒன்றை யும் கொடுக்காமல் எதனையும் பெறமுடி யாது" என்ற படிப்பினையை உதாசினம் செய்வதே மனித துயரத்துக்குக் காரணம்.

பகவானின் செய்தி.

1981 குருபூர்ணிமா செய்தியில் பாபா கூறினார்: "தன் குறுகிய தன்மை யிலிருந்து அனைத்தையும் அடக்கிய பெருநிலைக்குச் செல்பவனே மனிதனா வான். அதாவது அநாத்ம நிலையிலி ருந்து பரமாத்ம நிலையை அடைய வேண்டும். படிப்படியாக நிகழும் அந்த முன்னேற்றத்தில் வெற்றி பெறுவதற்கு இறுதிவரை வழிகாட்டக்கூடியதாய் குரு ஸ்தானத்தில் இயற்கை இருக்கின்றது. இறைவனால் நிறைவு பெற்றுள்ள இயற்கை முழுமையும் உண்மையாய் நம்பி ஏற்று நடக்கத் தக்க குருவே யாகும். கடவுளின் உபதேசம் நேர்முக மாக இல்லை. சுற்றியுள்ள இயற்கை மூலம் அவர் உபதேசிக்கின்றார். படைப் புலகைக் குருவாகப் போற்றுங்கள்".

ஓம் ஸ்ரீ சாயிராம்

பிராணாயாமம்

ஸ்ரீமதி. சியாமளா ரவீந்திரன்

பிராணாயாமம் என்றால் என்ன?

பிராணாயாமம் என்பது மூச்சுக் கட்டுப்பாட்டுப் பயிற்சி ஆகும். இதற்கு பிராணன் + ஆயாமம் என்று விழக்குவர். பிராணன் என்றால் சுவாசம். ஆயாமம் என்றால் ஒழுங்கு. பிராணாயாமம் என்றால் சுவாச ஒழுங்கு ஆகும்.

நாம் எவ்வளவு ஆறுதலாகவும், ஆழமாகவும் மூச்சை எடுக்கின்றோமோ, அவ்வளவு எமது ஆயுள் கூடும். நாம் மூச்சை எடுக்கும்போது எமது உடலினுள் இரத்தச் சுற்றோட்டம் நிகழ்கிறது. நாம் சுவாசத்தை உள்ளெடுக்கும் போது ஒட்சிசன் உள்ளே செல்கின்றது. உள்ளே சென்று சுவாசப்பையை அடைகிறது. இரத்தம் இதயத்தில் இருந்து சுவாசப் பைக்குச் சென்று, அங்கே சுத்திகரிக்கப் பட்டு, மீண்டும் இதயத்தை அடைகிறது. நாம் சுவாசத்தை வெளிவிடும்போது, எமது உடலிலுள்ள காபனீரொட்சைட்டு வெளியே செல்கிறது. நாம் விரைவாக மூச்சை எடுக்கும்போது, குருதிச் சுற்றோட்டம் வேகமாக நடைபெறுகிறது. அப்படி வேகமாக நடைபெறும் போது, எமது உடற்கலங்களில் காபனீரொட்சைட்டு தங்கிவிடுகிறது. இதனால் நாம் நோய் வாய்ப்பட வேண்டி நேரிடுகிறது. இவ்வாறு நாம் மூச்சுவிடும் வீதத்திற்கும், ஆயுட் காலத்திற்கும் தொடர்பு உண்டாகிறது.

பின்வரும் அட்டவணையைப் பார்க்கவும்.

மிருகங்கள்	சுவாச வீதம் (ஒரு நிமிடத்தில்)	ஆயுட் காலம்
முயல்	38 முறை	08 வருடம்
குரங்கு	30 முறை	10 வருடம்
நாய்	28 முறை	13 வருடம்
குதிரை	19 முறை	50 வருடம்
பாம்பு	08 முறை	120 வருடம்
ஆமை	05 முறை	155 வருடம்

சுவாச வீதம் குறைவான ஜீவராசிகள் அதிக ஆயுளையும், சுவாச வீதம் கூடியவை குறைந்த ஆயுளைக் கொண்டிருப்பதையும் நாம் அவதானிக் கலாம்.

மனிதன் ஒரு நிமிடத்தில் 12 முறை சுவாசிக்கின்றான். எமக்கு உணர்ச்சிகள் அதிகமாகும்போது, சுவாச வீதம் அதிகரிக்கிறது. கோபம், கவலை, மகிழ்ச்சி, எரிச்சல், பயம் போன்ற உணர்ச்சிகள் அதிகமாகும்போது, எமது சுவாச வீதம் அதிகரிக்கிறது.

நாடிசுத்தி

சுவாச ஒழுங்கை நாடிசுத்தி என்றும் கூறலாம். இதை எங்ஙனம் செய்யலாம்?

இதற்கு உதவுவது விஷ்ணுமுத் திரை. சுட்டு விரலையும், நடுவிரலையும் மடித்து வைத்துக் கொண்டு பெருவிரலால் வலது நாசித் துவாரத்தை மூடவும்; மோதிர விரலாலும் சின்ன விரலாலும் இடது நாசித் துவாரத்தை மூடப்பயன் படுத்த வேண்டும்.



பெருவிரலால் வலது நாசித் துவாரத்தை மூடி, மூச்சை இடது நாசித் துவாரம் வழியாக இழுத்து, பின்பு, இடது நாசித் துவாரத்தை மூடிக்கொண்டு வலது நாசித் துவாரம் வழியாக வெளிவிடவும். இதனைத் தொடர்ந்து வலது நாசித் துவாரம் வழியாக உள்ளிழுத்து, வலது நாசித்துவாரத்தை மூடிக் கொண்டு, இடது நாசித் துவாரம் வழியாக மூச்சை வெளிவிடவும். இப்படிச் செய்யும்போது ஒரு சுற்று எனப்படும். மூச்சு நிறுத்தப் படுவதில்லை. மூச்சை இழுப்பதற்கும், வெளிவிடுவதற்கும் கால அளவு இல்லை. இது ஆரம்ப சாதகர்களுக்கு மிகவும் உகந்த முறை.

இதனைக் காலையிலும், சாப்பிட்ட பிறகு 3 அல்லது 4 மணித்தியாலங்களின் பின்பும் செய்தல் வேண்டும். வயிறு இலேசாக இருக்கும்போது செய்தல் நன்று.

பிராணாயாமத்தில் நன்மைகள் பல உண்டு. அவை மூளையை விரிவடையச் செய்து ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்து, புத்திக் கூர்மையை மேலும் வளர்க்க உதவுகிறது. சுத்த

ான இரத்தச் சுற்றோட்டம் நிகழ்கிறது. ன்ன ஆயுளைக் கொடுக்கிறது.

ஆரம்ப சாதகர்கள் நாடி சுத்தி மூலம் மூச்சினைக் கட்டுப்படுத்தி ஒழுங் காக்க முடியும். பாலவிகாஸ் மாணவர் களுக்கு இது மிகவும் பொருத்தமானது. இப்பயிற்சி பின்னர் முறையான பிராணா யாமத்துக்கு இட்டுச் செல்லும். இதன்படி மூக்கின் ஒருபுறம் வழியாக மூச்சினை உள்ளிழுத்தல் **பூரகம்** எனப்படும். சுவாசப் பையில் மூச்சினை வைத்திருத் தல் **கும்பகம்** எனப்படும். மறுபுறம் வழியாக மூச்சினை வெளியேற்றுதல் **ரேசகம்** எனப்படும். பூரகம், கும்பகம், ரேசகம் இவற்றுக்குள்ள நேர விகிதம் 1:4:2 பாபா, "மூச்சுடன் **ஸோவினை** (அவன் - இறைவன்) உள்ளிழுங்கள். மூச்சுடன் ஹம்மினை (அகம் - அஹங்காரம்) வெளிவிடுங்கள்" என்கிறார். பிராணாயாமம் உடலின் ஒவ்வொரு உயிர்கலத்துக்கும் உயிரூட்டத்தையும் ஆக்க சக்தியையும் அளிக்கிறது பிராணா யாமம் என்பது வெறும் ஆழ்ந்த சுவாச மல்ல. உபநிஷத ரிஷிகளின் வாக்குப்படி, பிராணன் என்பது வெறும் மூச்சு விடுதல் மட்டுமல்ல. பிராணன் என்பது **பிரபஞ்ச உயிர்த் தத்துவமாகும்.** பிராணாயா மம் என்பது ஆன்மீகப் பயிற்சி. ஆழ்ந்த மூச்சுவிடுதல் என்பது தேகப்பயிற்சி. பிராணன் என்பது பிரபஞ்சம் முழுவதும் பரவியிருக்கும் உயிரூட்டும் சக்தி, வலிமையாகும். மூச்சு என்பது பிராணன் உடலின் இயக்கத்தில் வெளிப்படுவ தாகும். அது வாயு எனப்படுகிறது. நாம் பிரபஞ்ச உயிர்த்தத்துவத்துடன் பிராணா யாமத்தின் வழியாகத் தொடர்பு கொள் கிறோம். இவ்வாறு நமக்குள் பிராண சக்தியை பிராணாயாமத்தின் மூலம் சேகரித்து வைத்துக் கொள்கிறோம். ஆகையினால்தான் பாபா, "மூச்சுடன் **ஸோவினை** உள்ளிழுக்க வேண்டும். மூச்சுடன் **ஹம்மினை** வெளியேற்ற வேண்டும்" என்று கூறுகின்றார்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

சொர்க்கத்திலிருந்து உபதேசங்கள்

- பணத்தை இழந்தால், அதிகம் இழக்கிறாய்; ஒரு நண்பனை இழந்தால், மேலும் அதிகம் இழக்கிறாய்; நம்பிக்கை இழந்தால், எல்லாமே இழக்கிறாய்.

- கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவு தருகிறார்! ஆனால் அதை அதன் கூட்டுக்குள் போடுதில்லை.

- உயர்ந்த மனங்கள் கருத்துகள் பற்றி உரையாடும்; சராசரி மனங்கள் நிகழ்வுகள் பற்றி உரையாடும்; தாழ்ந்த மனங்கள் மனிதர் பற்றி உரையாடும்.

- நாக்கின் நிறை பெரிதல்ல: ஆனால், அதைத் தாக்குப் பிடிப்பது சிலரால்லேயே முடியும்.

- உன்னுடன் உறவாட தலையை உபயோகி.மற்றவர்களுடன் உறவாட இதயத்தை உபயோகி.

- Danger (ஆபத்து) என்ற வார்த்தையிலிருந்து ஒரு எழுத்து குறைந்ததுதான் Anger (கோபம்).

- யாராவது உன்னை ஒரு தரம் ஏமாற்றினால், அது அவரது பிழை; அவர் உன்னை இருதரம் ஏமாற்றினால் அது உன் பிழை.

- மற்றவர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்: நீ தவறுகள் செய்து படிப்பதற்கு வாழ்நாள் போதாது.

(ஒரு ஆங்கிலக் கவிதையின் தமிழாக்கம். ஆசிரியர் பெயர் தெரியவில்லை)

'வார்த்தையொன்றும் பேசாமல் வாசமுள்ள நோசாப் பூவாக இருங்கள்'

- பகவான் சத்திய சாயி பாபா.

(21.07.2002 இல் யாழ் இளைஞர் பிரிவின் கூட்டத்தில் திருகோணமலை திரு. கே. புவனேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு).

பகவானின் அருளைப் பெற்ற எல்லோருக்கும் சாயிராம்.

பகவானின் அருளின் நிமித்தம் நாம் இன்று இங்கு கூடியிருக்கிறோம். பகவான் எம்மைத் தனது கருவியாகத் தெரிவு செய்ததை யிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும். இம் மகிழ்ச்சி சேவையிலீடுபட ஓர் உந்து சக்தியாகும்.

பகவானின் கூற்று: "நீங்கள் ஒரு வார்த்தையும் பேசாமல் வாசமுள்ள நோசா மலராக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். வாசமிருந்தால் பேசத் தேவையில்லை. நானும் கடவுள் நீயும் கடவுள். நீ கடவுளென்பது உனக்குத் தெரியவில்லை. ஆனால் எனக்குத் தெரியும்."

எங்களில் இருக்கும் தெய்வீகப் பொறிதான் மனச்சாட்சி. இது ஆண்டவனின் குரல். மனச்சாட்சி ஒருபோதும் பிழையானதைச் சொல்லாது. நாம் மனச் சாட்சியின்படி நடக்கிறோமா? மற்றவர் களைப் பற்றி அவர்கள் இல்லாதபோது கதைப்போமானால் நாம் சாயி அடியார் கள் அல்ல. எனது நோக்கு சாயியின்

அடியை நெருங்குவதே. மனச்சாட்சியை விட்டு எவ்வளவு விலகிச் செல்கிறோமோ, அவ்வளவுக்கு நாம் பகவானிடமிருந்து பிரிகிறோம். நூறு வீதம் மனச்சாட்சியின் படி நடப்பதே என்னுடைய போராட்டம். இப்போராட்டத்தில் நாம் எங்கே நிற்கிறோமென்பதை இனம்காணவேண்டும்.

அதாவது:

1. மனம் சொன்னபடி போதல்; அல்லது தீயவற்றிற்குப் பின்னால் போதல். இது கீழ்த்தரம்.
2. மனம் சொல்வதை மனச்சாட்சி ஆராய்ந்த பின்பு பிழையை அல்லது தீயதை இனங்கண்டு நிறுத்தி விடுதல். இது நடுத்தரம்.
3. மனச்சாட்சியிலிருந்து எழுவதையே மனம் எண்ணுவதால் பிழையானது ஒருபோதும் எழுவதில்லை. இது உன்னத நிலை.

நம்மில் அனேகர் இரண்டாவது நிலையிலேயே செயற்படுகின்றோம். எனக்குள் எழும் கெட்ட எண்ணங்களை இனம் காண்பது தான் சாதனை. நானே எனது வாழ்க்கையை மாற்ற வேண்டும். இதற்கு பகவானின் அருளும் தேவை. எண்ணம் சொல் செயலில் தூய்மையும் ஒருமையும் இருத்தல் வேண்டும். இது தான் திரிகரணசுத்தி.

திரிகரண சுத்தியில் எண்ண சுத்திதான் முதற் சுத்தி. அதுவே இதன் நோக்கம். திரிகரண சுத்தியைக் கடைப்பிடிப்பதே தர்ம சங்கடமான போராட்டம். சாயி வாழ்க்கையே இதற்கு பரிகாரம்.

இளைஞர்களே! உங்களுக்கு சில அறிவுரைகள்:

- மூத்தவர்களுடன் அபிப்பிராய பேதம் ஏற்படும் போது விட்டுக் கொடுக்க வேண்டும்.
- மிக அமைதியுடனும் ஒழுங்குடனும் பெரியோர்களின் வழி நடத்தலில் செயற்பட வேண்டும்.
- மூத்தவர்களில் தவறுகள் இருந்தால், தவறுகளை ஏற்றுக் கொண்டு பகவானிடம் சமர்ப்பியுங்கள்.
- நீங்கள் வருங்கால தலைவர்கள். மேற்கூறியதை கடைப்பிடித்தால் பகவானின் மிகச் சிறந்த கருவிகளாகத் திகழ்வீர்கள். நீங்கள் அதிஷ்டசாலிகள். இளமையிலேயே பகவானிடம் வந்து விட்டீர்கள்.
- நூறுவீதம் சேவையிலீடுபடுங்கள். ஆன்மீக நூல்களை வாசிப்பதிலும் பார்க்க,பிரார்த்தனைகளிலும் பார்க்க சேவையே மேலானது. பக்தி மார்க்கத்தின் முடிவு சரணாகதி. இது மிகவும் கஷ்டமானது. பிரதியுபகாரம் கருதாத சேவை மூலம் சரணாகதியை மிகவும் இலேசாக அடையலாம். **எங்கே சேவை செய்கிறீர்களோ அங்கே நான் பிரசன்னமாவேன்** என்கிறார் பகவான் பாபா. சேவையின் தரம் உள்நோக்கில் தான் தங்கியுள்ளது.

மூச்சுவிடும் போது பகவானை நினைத்து பகவானின் எண்ணத்தில் என்றும் வாழ்ந்து வந்தால், பகவானின் அருள் கிடைக்கும்.

ஜெய் சாயிராம்.

உரையை அடுத்து நிகழ்ந்த கலந்துரையாடலின் சாரம்.

கேள்வி: இளைஞர்கள் பிரத்தியேக பாட வகுப்புக்களுக்குப் போவதா? அல்லது சாயி நிறுவன நிகழ்வில் கலந்து கொள்வதா? என்ற மனநெருக்கடியை நோக்குகிறார்கள். மேலும் பெற்றோர்களும் பாட வகுப்புகளுக்குப் போவதையே மிகவும் விரும்புகிறார்கள். இதை எவ்வாறு எதிர்கொள்ளலாம்?

பேச்சாளர்: படிக்கிற வயதில் படிக்கிற நேரத்தில் படிக்கத்தான் வேண்டும். படிப்பையே பிரார்த்தனையாக்குங்கள். கடமையாகக் கருதுங்கள். இதைத்தான்

பகவான் Work is worship, Duty is God என்று கூறியுள்ளார். காயத்திரி மந்திரத்தை உச்சரித்து புத்திநுட்பத்தை அதிகரிக்கச் செய்யுங்கள். பகவானை இடைவிடாது தொடர்ந்து சிந்தியுங்கள். படிப்பதை மக்கள் சேவைக்காகவே டிக்கிறேன் என்று நோக்கினால் இதுவே பிரார்த்தனையாகின்றது.

கேள்வி: எப்படி பகவானை தொடர் சிந்தனையிலமர்த்தலாம்?

பேச்சாளர்: பகவானின் நாமத்தை மூச்சு டன் சேர்க்க வேண்டும். பாலவிகாஸ் கதைகளைத் திரும்பவும் படியுங்கள்.

ஜெய் சாயிராம்.

(தொகுத்தவர்:செல்வி. பற்டரா சண்முகலிங்கம்)

வடமராட்சியில் இளைஞர் சாதனா முகாம்

ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத் தின் வட பிராந்திய இளைஞர் பிரிவின ரின் சாதனா முகாம் கடந்த 24.06.2002 அன்று மந்திகை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. வலிகாமம் பகுதியிலிரு ந்து 41 இளைஞர்கள் வந்திருந்தனர். அவர்களின் வருகை வடமராட்சி இளைஞர்களுக்கு ஊக்கம் தருவதாக இருந்தது.

சாதனாமுகாம் காலை 10.00 மணிக்கு ஓங்காரத்துடன் ஆரம்பமாகியது. 21 தடவை ஓங்காரம், பஜனை, யோகர் சுவாமிப்பாடல், காயத்திரி ஜெபம், தியா னம் எனத் தொடர்ந்து சாதனை மங்கள ஆரத்தியுடன் பகல் 12.00 மணிக்கு நிறைவுற்றது.

சாதனை முடிவில் இளைஞர் பிரிவு இணைப்பாளர் Dr. R. கணேச-மூர்த்தி அவர்கள் இளைஞர்கள் ஆன்மீக ஈடுபாடு கொண்ட உன்னத மனிதர்களாக வேண்டும் என சுவாமி விரும்புகிறார் என்றார். எமக்கு ஏற்படும் கஷ்டங்கள், தொல்லைகளை எதிர்கொள்ளக் கூடிய சக்தியை சுவாமியின் வழிச்செல்லும் இளைஞர்கள் பெறலாம் என்று சிறு சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

அடுத்து சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்விப் பணிப்பாளர் பேரா சிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் "இளைஞரும் ஆன்மீகமும்" என்னும் பொருள் பற்றி உரையாற்றினார். மகிழ்ச்சிதான் ஆன்மீகம்; உள்ளத் தூய்மை, மனத்தில் நல்ல சிந்தனை ஆகியவற்றை இளைஞர்கள் பெற்று நல்ல மனிதர்களாக வேண்டும் என்று எம்மை வழிநடத்தி செல்கின்ற ஒரு அவதாரபுருஷர் வாழும் காலத்தில் நாம் வாழுகின்றோம் என்றார். எம்மோடு ஒவ் வொரு செய்கைகளிலும் அருகில் இருந்து பார்க்கின்ற தெய்வம் என்றும் கூறினார். சாயிமார்க்கம் பத்திரிகையில் நல்ல கருத்துக்கள் இடம்பெறுகின்றன அவற்றை இளைஞர்கள் படித்தல் வேண்டும். மூன்று மொழிகளில் வருகின்ற பத்திரிகை என்றும் கூறினார். நிறைவாக இளைஞர்கள் ஒன்று திரண்டு ஆன்மீக சக்தியை பெற்று நல்லவர்களாக வாழவேண்டும் என்று கூறினார்.

இளைஞர் பிரிவுத் தலைவர் ஸ்ரீ. S. சசிதரன் அவர்கள் முடிவுரையில் எதிர்வரும் ஜூலை 12, 13, 14 ம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இளைஞர் பிரிவினர் ஏற்பாடு செய்துள்ள "மனித உன்னதம்" கண் காட்சியைப் பற்றி விபரித்து அதற்கு வடமராட்சி இளைஞர்களின் பூரண ஒத்துழைப்பை வேண்டினார்.

இச் சாதனை முகாமில் வட பிராந்திய இணைப்புக் குழுவின் உப

தலைவர் ஸ்ரீ. S. R. சரவணபவன், சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி நிர்வாக உத்தியோகத்தர் ஸ்ரீ. V. சேனாதிராஜா, மந்திகை நிலையத் தலைவர் ஸ்ரீ. V. K. சபாரத்தினம், பருத்தித்துறை வேலாயுதம் கல்லூரி அதிபர் ஸ்ரீ. A. ஜெகநாதன் அவர்கள் ஆகியோரும் பங்குபற்றினர்.

மந்திகை சாதனை முகாமின் பின்பு சாயி இளைஞர்கள் செல்வச் சந்நிதி முருகன் கோவிலுக்குச் சென்று பஜனை நடாத்தினார்கள். சந்நிதியான் ஆச்சிரமத்தில் மதிய போசனத்தில் பங்கு கொண்டனர்.

ஜெய் சாயிராம்

சாயி சேவையில்
மு. மு. யோகேந்திரன்.

பஞ்ச பூதங்களின் குணங்களும் இயல்புகளும்

எஜுகேர் என்ற சாயி கல்விக்கொள்கையும் திட்டமும் பஞ்ச பூதங்களின் குணங்களையும் இயல்புகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அவை இங்கே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. ஆதாரம்: ஸ்ரீ சத்ய ஸாயி எஜுகேர் (2002), SRI SATHYA SAI BOOKS AND PUBLICATIONS TRUST (T. N.) "SUNDARAM", CHENNAI 28.

1. ஆகாயம் (வெட்டவெளி – Space)

அறிமுகம்:

படைப்பின் தொடக்கத்தில் இறைவன் 'ஓம்' என்ற ஒலியைக் கூறினார். அதனை வைத்திருக்க ஒரு இடம் தேவைப்பட்டது. வெட்டவெளி இதனால் உருவாகியது. எங்கும் வியாபித்திருக்கும் அளவற்ற ஆற்றல் (capacity) அதற்கு உண்டு. அது எல்லாவிடத்திலும் இருக்கின்றது. அது அனைத்தையும் தனக்குள் அடக்கிக் கொள்ள வல்லது. நமது முன்னோர்கள் வெட்டவெளி (Space) தன்னை இறைவனாகக் கருதி வழிபட்டனர். அதற்கு சப்தப்ரம்மன் (ஒலி வடிவிலான இறைவன்) என்றும் பெயரிட்டனர்.

குணங்கள், இயல்புகள்.

இந்த பூதம் (மூலக்கூறு, element) **ஒலி** என்ற இயல்பினைக் கொண்டது. இசையும் மற்ற எல்லா ஒலிகளும், அனைத்துப் பொருளுக்கும் (Matter) ஆற்றலுக்கும் (Energy) ஆதாரமான 'ஓம்' என்ற பேரண்ட ஒலியின் வெளிப்பாடுகளேயாகும். வெட்டவெளி எவ்வாறு எங்கும் பரந்து விரிந்திருக்கும் தன்மை கொண்டதோ, அவ்வாறே நாமும் நமது இதயத்தை விரிவடையச் செய்து, அனைத்தையும் நமக்குள் ஏற்று, படைப்பு முழுவதையும் நேசிக்கும் பேரன்பு நிறைந்து இருத்தல் வேண்டும்.

2. காற்று (AIR)

அறிமுகம்.

காற்று, இறைவனால் படைக்கப்பட்ட மிக முக்கியமான மூலப்பொருள் (element) பூதம், காற்றில்லாமல் சிறிது நேரமும் ஜீவராசிகள் உயிர்வாழ இயலாது. காற்றினை நமது முன்னோர்கள் வாயுதேவன் என்று வழிபட்டு வணங்கினர்.

குணங்கள், இயல்புகள்.

காற்றுக்கு இரு குணங்கள் உண்டு. ஒன்று **ஒலி**, இன்னொன்று **தொடுதல்**. அது பற்றில்லாது இருக்கும் இயல்புடையது. அது எங்கும் அசைந்து செல்வது. ஆனால் அது எந்த விடயத்திலும் பற்றிக் கொள்வதில்லை.

ஏழையோ, பணக்காரனோ, மனிதனோ, விலங்கோ, தாவர இனமோ, பிராணிகள் இனமோ, எல்லோரிடமும் எந்த சுயநலமு மில்லாமல் எந்த பாரபட்சமும் இல்லாமல் எல்லோருக்கும் தன்னை வழங்குகிறது. அனைவருக்கும் அன்பே காற்றாக வந்து தன்னை வழங்கிக் கொள்கிறது. காற்றில் லாது, இனிய இசை உருவாக இயலாது.

3. நெருப்பு (அக்கினி – FIRE) அறிமுகம்.

நெருப்பு என்ற மூலப்பொருள் (Element – பூதம்) ஒளியைக் குறிக்கி றது. நெருப்புக்கு, அக்னி தேவன் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் நெரு ப்பை வழிபடுகிறோம். ஹோமங்கள் செய்கிறோம். தீயைக் கொண்டு, நாம் அனைத்துக் கடவுளருக்கும் ஆரத்தி எடுக்கிறோம்.

குணங்கள், இயல்புகள்.

நெருப்புக்கு சப்தம், ஸ்பரிசம், உருவம் இந்த மூன்று இயல்புகளும் உண்டு.

நெருப்பு தான் எரிந்து கொண்டு, பிறருக்கு ஒளி தருகிறது. அது சக்தி பினையும் பரப்புகிறது. சூரியனும் ஒரு விதத்தில் நெருப்புக் கோளமாகும். அது சக்தியும் ஒளியும் தருகிறது. ஒளி, அறி வினைக் குறிக்கும் சின்னம். ஒளி இரு ட்டை விலக்குவது போல, அறிவும் அறியாமை என்ற இருட்டை விலக்கு கிறது. நெருப்பு, அனைத்திலும் உள்ள மாசினை எரித்து அவற்றைத் தூயதாக்கு கிறது. (உ–ம்) தங்கம். ஆகவே, அது தூய்மையின் சின்னம் கூட. அறிவின் ஒளி பிரகாசிக்கும் போது, வெறுப்பு, பொறாமை, பேராசை போன்ற கெட்ட குணங்கள் விலகி, நற்குணங்கள் அவற் றின் இடத்தை எடுத்துக் கொள்கின்றன. நெருப்பின் தீ எப்போதும் மேலே செல்கிறது. அது போலவே, நாமும் உயர்ந்து சிறந்த இலட்சியங்களையும், எண்ணங்களையும் எப்போதும் கொள்ள வேண்டும்.

4. நீர் (WATER) அறிமுகம்

இறைவன் படைப்பில், தண்ணீர் அமுதம் போன்றது. தண்ணீரில்லாது உயிர்வாழ இயலாது. மனித வாழ்க்கை, விலங்கு வாழ்க்கை, தாவர வாழ்க்கை இவையனைத்தும் பிழைத்திருக்க தண்ணீர் மிகவும் அவசியம். பாரத நாட்டில், அனைத்து நதிகளையும், கங்கா மாதா, கோதாவரி மாதா, காவிரி அன்னை என்றிவ்வாறு கூறுகின்றோம். அவற்றை தேவியர்களாக வழிபடுகிறோம். கங்கா மாதேவிக்கு தினமும் ஆரத்தி நடைபெறு கிறது. இவ்வாறு, உயிரூட்டும் தண்ணீர் கொடுப்பதற்காக, இந்த நதிகளுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றோம்.

சுயநலங் காரணமாக, மனிதன் இந்த நதிகளைத் தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. தமது குப்பை களையெல்லாம் அவற்றினுள் எறிகிறோம். நதிகளின் அருகில் உள்ள தொழிற் சாலைகளும் வேண்டாத கழிவுப் பொருள் களை ஆற்றிலேயே விட்டு, அவற்றை மனிதன் பயன்படுத்த இயலாது, பயனற்ற தாக்கிவிட்டன. இயற்கையின் சமநிலை யும் குலைந்துள்ளது. அன்றாட வாழ்க் கையிலும் நாம் அதிகத் தண்ணீரை வீண் செய்கிறோம். தேவைக்குத் தகுந்த அளவுக்கு குறைத்து கொள்வதில்லை. இயற்கையும், சில இடங்களில் வெள்ளங் களையும், சில இடங்களில் பற்றாக்குறை யும் உருவாக்கி நம்மை தண்டிக்கிறது.

குணங்கள், இயல்புகள்.

தண்ணீருக்கு **ஒலி, ஸ்பரிசம், வடிவம், சுவை** ஆகிய நான்கு இயல்புகளும் உண்டு. இடைவிடாது ஓடிக்கொண்டிருக்கும் குணமும் அதற்கு ண்டு. எப்போதும் அது அசைந்து கொண் டேயிருக்கும். நாம் அதனிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று ண்டு. பிறருக்கு உதவி செய்வதும், இயற்கையில் இசைவு ஏற்படச் செய்வது மான பணியினை, சோம்பல் பாராமல்

செய்து கொண்டே இருக்க வேண்டும். தண்ணீர் எப்போதும் உயர்ந்த நிலையிலிருந்து தாழ்ந்த நிலைக்கு ஓடிக் கொண்டே இருக்கிறது. எந்த அளவுக்கு உயரத் தில் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அதன் ஆற்றலும் அதிகமாக இருக்கிறது. மின் சக்தி உருவாக அது உதவி செய்கிறது. கீழ்நோக்கிச் செல்ல அது தயங்குவதில்லை. அது போலவே நாமும் அகந்தையைக் கைவிட்டு ஏழைகளை நேசிக்க வேண்டும். இயல்பாகத் தண்ணீர் பருகும்போதும், நீராடும் போதும் குளிர்ச்சி யைத் தருகிறது. ஓடும் தண்ணீர் தன்னு டன் அழுக்கையும் எடுத்துச் செல்கிறது. அந்தப் பகுதியை ஒழுங்காகவும் சுத்த மாகவும் ஆக்கிறது.

5. நிலம் (EARTH).

பஞ்ச பூதங்களும், இறைவனது தெய்வீகப் பொருட்களாகும். ஆகவே நமது முன்னோர்கள் அவைகளைக் கடவுளாகப் போற்றி வந்தனர். நாம் பூமியிலிருந்து நமக்குள்ள அநாவசியத் தேவைகளைக் குறைத்துக் கொண்டு, நற்செயல்கள் புரிவதன் மூலம் நாம் பூமியை எப்போதும் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

குணங்கள், இயல்புகள்.

பூமிக்கு **ஒலி, ஸ்பரிசம், வடிவம், சுவை, மணம்** ஆகிய ஐந்து இயல்புகளும் உண்டு.

பூமி நமக்கு சக்தியும் உணவும் தருகிறது. பூமியின் உதவியைக் கொண் டுதான் நமது வாழ்க்கை நடைபெறுகிறது. அது நமக்குப் பொறுமையும் பரந்த மனப்பான்மையும் தருகிறது. லேசான, கன்மான வாகனங்கள் அதன் மேல் செல்லுகின்றன. நாம் அதனைத் தோண்டு கின்றோம். கலப்பையால் அதனை உழு கிறோம். அதற்குப் பல இடைஞ்சல் களும் காயங்களும் தருகிறோம். ஆனால் அது மிகவும் அமைதியுடன் இவை அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறது. பிரதியாக, நமக்கு உணவு, பிற அவசி யமான பொருட்களான விறகு, நிலக்கரி, தாதுப் பொருள்கள் போன்றவற்றைத் தருகிறது.

நவராத்திரியும் ஒரு சிவவழிபாடே

S. R. சரவணபவன்

உத்தராயண காலத்தில் சித் திரை மாதம் சூரியன் உச்சிக்கு வரும் நடுப்பகுதியில் அமைந்த காலமாதலால் முக்கியத்துவம் பெறும் ஒரு மாதம். அதே போல தெட்ஷணாயன காலத்தில் புரட்டாதி மாதமும் நடுப்பகுதியில் அமைவதால் தேவர்களுக்கு நடுநிசி நேரமாகும். ஆகவே இம்மாதம் முழுவதும் இறை வனக்கத்திற்குரிய மாதமாக வகுக்கப் பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் தூய இறை சிந்தனையுடன் ஆலயங்களுக்குச் சென்று தீபமேற்றி இறைவனை வணங்கச் செய்யும் நாள் புரட்டாதிச் சனி. எமது முன்னோர்களை நினைத்து அவர்களை வழிபடும் மஹாளயபட்ஷம் இம்மாதத் தில்தான் வருகிறது. 15 தினங்கள் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நவராத்திரி காலம் இம்மாதத்தில் வருவதும் கவனிக்கவேண்டியது.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்கள் நவராத்திரியை வெகு சிறப்பாக பிரசாந்தி நிலையத்தில் கொண்டாடுகின் றார். கிரியைகளைக் குறையுங்கள் என்று கூறிவரும் பகவான் நவராத்திரி காலத் தில் வேதபண்டிதர்களை அழைத்து பெரி யளவில் ஹோமம் செய்து சக்தி வழிபாட்டை நடாத்தி வருவது கவனிக்க வேண்டும்.

நவராத்திரியில் துர்க்கை,லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு விசேட பூசை நடைபெறும் காலமாகக் கொண்டாலும் கூர்ந்து அவதானித்தால், இது ஒரு சிவவழிபாடு என்பதை அறிந்து கொள்ளலாம்.

சிவலிங்கத்தில் பிரம்மா,விஷ்ணு, உருத்திரன் ஆகிய தெய்வங்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரம்மதேவருக்கும், நடுப் பாகம் ஆவுடையார் விஷ்ணுபாகமாகவும், மேற்பகுதி உருத்திர பாகமாகவும் கொள் ளப்படுகிறது. இவர்களின் சக்தியாக உருத்திரருக்கு துர்க்கையும், மஹா விஷ்ணுவுக்கு லக்ஷ்மியும், பிரம்மாவிற்கு சரஸ்வதியும் விளங்குகின்றனர். இம் மூன்று சக்திகளை விசேடமாக வழிபட ஏற்படுத்தப்பட்டதே நவராத்திரி வழிபா டாகும்.

சக்தி என வரும்போது குணங் களும் சேர்ந்துவிடுகிறது. சத்வம், ரஜஷ், தமோ குணம் என முக்குணங்களுக்கு மாக மூன்று தெய்வ சக்திகளும் 9 தினங்கள் நவராத்திரியாக கொண்டாடப் படுகிறது. கடைசிநாள் சத்தியெல்லாம் கிடைத்த வெற்றித் திருநாளாக விஜயதசமி கொண்டாடப்பட்டுகிறது.

சிவலிங்கத்தில் அமைந் துள்ள 3 தேவர்களின் சக்திகளை விசேடமாக இந்த 9 தினங்களும் வழி பட்டு அவர்களின் அருளைப்பெற்று வாழ்க்கையை வெற்றிகரமாக நடாத்த அமைந்ததுதான் நவராத்திரி விழாவாகும். ஆகவே நவராத்திரி விழா சிவலிங்கத்தை வேறொரு கோணத்தில் இருந்து வழிபடும் விழாவாகும்.

பக்தியோடும், கட்டுப்பாடோடும் கடமையைச் செய்தல்; உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிதல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல், பேரன்போடு போடப்படும் வரையறைகளுக்கு அடங்கி நடத்தல் - இதுவே சுவாமியின் அணுக்கிரகத்தைப் பெறும் தலையாய மார்க்கமாகும்.

S. S. S பாகம் 9 பக்கம் 131.

சுவாமி விதித்துள்ள ஒழுங்கு விதிகள் உங்களில் சிலருக்கு கத்தி பாய்ச்சுவது போல அல்லது சம்மட்டி அடிபோலத் தோன்றலாம். நோக்கம் நோயைத் தீர்ப்பதாகும். விட்டுப்போனதை ஒட்டுவதாகும். ஒழுங்கு விதிகளுக்குப் பணிந்து உளமார அணுசரித்து நடவுங்கள். உங்கள் பாதை பூவிதழ்கள் தூவியதுபோல மிருதுவாகவும் சுலபமாகவும் இருக்கும். அணுசரிப்பவர்களை ஆசீர்வதிக்கிறேன்! கட்டுப்பாட்டுணர்வினாலும், பக்தியினாலும் விளையும் நன்மைகளை அவர்கள் பெறுவார்கள்!

(S. S. S பாகம் 13 – பக்கம் 76)

சேவைச் செய்திகள்

பாலவிகாஷ் சிறுவர் ஒன்றுகூடல்

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்கள் இணைந்து பாலவிகாஷ் சிறுவர் தினத்தை 14.07.2002 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடாத்தினார்கள்.

அகில இலங்கை சாயி நிறுவனங்களின் ஆலோசகர் ஸ்ரீ செ. சிவஞானம் ஐயா அவர்கள் கொடியேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்தார். அப்போது இந்நிகழ்வில் கலந்துகொண்ட 260 பாலவிகாஷ் மாணவர்களும் சுற்றிவர நின்று பாலவிகாஷ் பாடத்திட்டத்திலுள்ள 17 சுலோகங்களையும் மிகவும் பக்திபூர்வமாக ஓதியமை பலருடைய பாராட்டுதல்களையும் பெற்றது. இணைப்புக் குழுத் தலைவர் ஸ்ரீ. இ. வசந்தசேனன் அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்தார். பாலவிகாஷ் இணைப்பாளர் ஸ்ரீமதி. ம. சரவணபவன் அவர்கள் அறிமுக உரையை நடாத்தி விழாவை நடாத்தினார்.

பாலவிகாஷ் சிறுவர்களின் பெற்றோர்களுக்கான ஆலோசனைக் கூட்டமும் மாலை 1.30 மணிக்கு வேறாக நடைபெற்றது. "பாலவிகாஷ் கல்வி எமது பிள்ளைகளில் ஏற்படுத்திய மாற்றம்" என்ற தலைப்பில் ஒரு பெற்றார் உரையாற்றினார். "பாலவிகாஷ் கல்வி என்னில் ஏற்படுத்திய மாற்றம்" என்ற விடயம் பற்றி பாலவிகாஷ் எல்லாப் பிரிவுகளிலும் பயின்று தற்போது உயர்கல்வி கற்று வரும் 3 பழைய மாணவர்கள் தமது அனுபவங்களைக் கூறினர். சிறப்பு நிகழ்ச்சியாக அகில இலங்கை பாலவிகாஷ் இணைப்பாளர் திருமதி. சியாமளா இரவீந்திரன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். அவர் தமது ஆரம்பகால பங்களிப்புகளை நினைவு கூர்ந்தார்.

இறுதியாக ஸ்ரீ. செ. சிவஞானம் ஐயா அவர்கள் நிறைவுரையின்போது ஒவ்வொருவரிடமும் இப்படியான ஒன்று கூடல் நிகழ்ச்சியை நடாத்துவதன் மூலம் ஒரு புதிய உற்சாகத்தை ஏற்படுத்த முடியும் என்று கூறி பங்குபற்றிய 263 பிள்ளைகளுக்கும் 55 பாலவிகாஷ் குருமாருக்கும், இணைப்பாளருக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்தார்.

இரத்ததானம்.

அகில உலக இரத்ததான தினம் 15.09.2002 ஞாயிற்றுக்கிழமை இலங்கை முழுவதும் கொண்டாடப்பட்டது. வடபிராந்தியத்தில் அனைத்து நிலையங்களும் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இரத்தம் வழங்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த இரத்த வங்கிப் பிரிவினர் சமூகமளித்து இரத்தத்தை ஏற்றுக் கொண்டனர். இங்கு 31 பேர் இரத்தம் வழங்கினர். 16½ பைந் இரத்தம் பெறப்பட்டது.

இதேபோல் வடமராட்சிப் பிரிவிலும் மந்திகை வைத்தியசாலையில் வடமராட்சியைச் சேர்ந்த சாயி அங்கத்தவர்கள் இரத்தம் வழங்கினர். 5 பேரிடமிருந்து 4½ பைந் இரத்தம் பெறப்பட்டது. தேவை ஏற்படும்போது இரத்தம் வழங்க பலர் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொண்டனர்.

அன்பு வாரம்.

ஒக்டோபர் 14ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 20ந் திகதி ஞாயிறு வரையுள்ள ஏழு நாட்களையும் புனிதமான காருண்ய உணர்வுகள் நிறைந்த

அன்பு வாரமாகக் கொண்டாடப்பட வுள்ளது.

21ம் நூற்றாண்டில் அன்பினூடாக புதிய சகாப்தத்தை நோக்கி வெற்றி நடைபோட உதவும் தெய்வீகத் திருப் பணியின் கருவிகளாக எம்மை உயர்த்தி இவ்வாரத்தினை கோலாகலமாக கொண் டாடி இவ்வார எண்ணங்கள் தொடர்ந்து எமது வாழ்வின் அடித்தளமாக அமைய ஒவ்வொரு நிலையமும் முன்வரவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

01. இவ்வாரத்தில் சாயி நிலையங்களில் அன்பின் பெருமையை உணரத்தக்க விதமாக அன்பு பற்றி:
1. பஜனை முடிவில் உரை நிகழ்த் துதல்.
2. கல்வி வட்டத்தில் கலந்துரை யாடுதல்.
3. பாலவிகாஷ் வகுப்புகளில் எடுத்து ரைத்தல்.

02. இவ்வாரத்தில் சாயி பக்தர் ஒவ் வொருவரும்;
1. தங்கள் இல்லங்களில்.
2. தங்கள் சாயி நிலையங்களில்.
3. தாங்கள் பணிபுரியும் வேலைத் தளங்களில்.
4. சமூகத்தில்.

அன்பை தீவிரமாக மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல் வேண்டுமெனவும் அன்பின் சக்தியை ஒவ்வொருவரும் அறிந்து கொள்வதோடு மட்டுமன்றி மற்றவர்கள் உணரத்தக்க விதமாக நடத்தை அமைய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

03. கட்டுரை, கவிதைப் போட்டி.

பாடசாலை மாணவரிடையே ஓர் கட்டுரை, கவிதைப் போட்டியினை இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளது.
1. 15 வயதிற்குட்பட்ட மாணவர்கள்.
2. 15 வயதிற்கு மேற்பட்ட மாணவர் கள்.

மாணவர்களின் வயது, ஆக்கம் மாணவர்களால் ஆக்கப்பட்டது என்பன பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும். இவை பற்றிய விபரங்கள் பாடசாலை அதிபர்களிற்கு நேரடியாகவே அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

04. பாடசாலைகளில் சொற்பொழிவு.

ஒவ்வொரு நிலையத் தலைவரும் தங்கள் நிலையத்திற்கு அண்மையில் உள்ள பாடசாலைகளிற்கு சென்று அதிபரை சந்தித்து 'அன்பு வாரத்தில்' அன்பு பற்றி ஆசிரியர் மாணவர்களிற்கு ஓர் உரை நிகழ்த்துமாறும் கட்டுரை, கவிதைப் போட்டிகளில் பங்குகொள்ளு மாறும், ஊக்குவிக்குமாறும் வேண்டப்படு கிறது.

"அன்பு வாரத்தில்" அன்பு பற்றிய பகவானின் அருளுரைகள் சமூகத்தில் ஒவ்வொருவரையும் சென்றடைய எம்மா லான முயற்சிகளை மேற்கொள்வோம் என மனித மேம்பாட்டுக் கல்வி இணை ப்பாளர் திரு. K. V. சிவனேசன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

சத்திய சாயி மேம்பாட்டுக்கல்விப் பயிற்சிகள்.

வடபிராந்திய இணைப்புக் குழுவி னால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித மேம்பாட்டுக் கல்விப் பயிற்சிகள் தற் போது புதிய ஒரு வடிவத்தை எடுத்து ள்ளது. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுவரும் சுமார் 500 ஆசிரியர்களுக்கு மனித மேம்பாட்டுக் கல்வியில் பயிற்சியளிக்கும் படி கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக அங்கு 30.09.2002 அன்று பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதலாவது குழுவில் 53 ஆசிரியர்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டது. மிகுதி ஆசிரியர்கள் அனைவருக்கும் பயிற்சியளிக்கப்படும். முதலாவது குழுவில் பயிற்சியளிக்கப் பட்ட அனைவரும் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களாவர். ஒவ்வொரு குழுவினருக் கும் பயிற்சியளிக்க 6 மணித்தியாலங்கள்

3 நாட்களில் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது. பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் அவர்கள் தலைமையிலான குழுவினர் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முதலாவது குழுவில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் வன்னிப் பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரிய கலாசாலைகளில் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியைப் பயிற்றுவிப்பதன் மூலம் இப்பயிற்சி நாடு முழுவதுமுள்ள தமிழ் மொழிப் பாடசாலை அனைத்திற்கும் சென்றடையக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இளைஞர் பிரிவுக் கண்காட்சிகள்.

"மனித உன்னதம்" என்ற தலைப்பில் வடபிராந்திய சத்திய சாயி இளைஞர் பிரிவினர் ஒரு கண்காட்சியை யூலை மாதம் 12ம், 13ம், 14ம் திகதிகளில் இராமநாதன் கல்லூரியில் நடாத்தினர். இக்கண்காட்சியை வலிகாமப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. V. இராசையா அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

'மனித உன்னதம்' என்ற இக்கண் காட்சியை அக்டோபர் மாதம் 4ம் 5ம் திகதிகளில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடாத்தினர். இங்கு சுமார் 2000 உயர்தர வகுப்பு மாணவர்கள் பார்வையிட்டு பயனடைந்தனர்.

45 நாள் சாதனை (அக்டோபர் 9 முதல் நவம்பர் 22 வரை)

ஒரே நேரத்தில் பல இடங்களில் ஒரே நோக்கத்திற்காக செய்யப்படும் பிரார்த்தனைக்கு அதிக சக்தி உண்டு என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு அக்டோபர் 9ந் திகதி முதல் நவம்பர் 22ந் திகதி வரை மாலை 7.30 மணி தொடக்கம் 8.00 மணி வரை வடபிராந்தியத்திலுள்ள சாயி பக்தர்களும் ஏனைய அடியார்களும் கடந்த பல வருடங்களாக ஒரு சாதனை நிகழ்ச்சியை நடாத்தி வருகின்றனர். நாட்டில் சாந்தியும் அமைதியும் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடமும் இந்த சாதனை நிகழ்ச்சி நடைபெறும் என ஆன்மீக இணைப்பாளர் திரு. க. சிவபாதவிருதையர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மாலை 7.30 மணிக்கு 3 முறை ஓம்காரம் தொடர்ந்து 7.50 வரை காயத்திரி ஜெபம் அல்லது விருப்பமான முறையில் தேவாரம் அல்லது பஜனை. 7.50 – 8.00 மணி வரை ஜோதி தியானம். இந்த ஒழுங்கில் பங்குபற்றும் அனைவரும் சாதனை செய்யுமாறு ஆன்மீக இணைப்பாளர் வேண்டியுள்ளார்.

24 மணிநேர அகண்ட பஜனை (நவம்பர் 9ந் திகதி மாலை 6.00 மணி தொடக்கம் 10ந் திகதி மாலை 6.00 மணி வரை).

வட பிராந்தியத்தில் கடந்த பல வருடங்களாக 24 மணிநேர அகண்ட பஜனை செய்ய முடியாத சூழ்நிலை இருந்து வந்தது. ஆனால் இன்று நிலமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் இவ்வருடம் 24 மணிநேர பஜனையை எல்லா நிலையங்களும் செய்ய வேண்டுமென ஆன்மீக இணைப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பஜனை நிலையங்கள் அருகிலுள்ள நிலையங்களுடன் இணைந்து அகண்டபஜனையில் ஈடுபடலாம் எனத் தெரிவித்துள்ளார்.

தீப ஒளி சாதனை (தீபாவளி)

தீபாவளி அன்று காலை 7.30 மணிக்கு வழமைபோல வடபிராந்தியத்திலுள்ள எல்லா நிலையங்களிலும் தீப ஒளி சாதனை நடைபெறும். 7.30 மணிக்கு 3 முறை ஓம்காரம் தொடர்ந்து தலைவர் பிரதான தீபத்தை ஏற்றுதல். தொடர்ந்து எல்லோரும் தாம் கொண்டு வந்த தீபங்களை பிரதான விளக்கிலிருந்து ஏற்றி வரிசையாக அடுக்குதல். இந் நிகழ்ச்சி முடியும்வரை எல்லோரும் காயத்திரி மந்திரம் சொல்லுதல். தொடர்ந்து பஜனை அஷ்டோத்திரம் போடுவதற்கு அரிசி பாவிக்கலாம். இது நாராயண சேவைக்கு உதவும் என ஆன்மீக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

அச்சுப் பதிப்பு: காருண்யா ஏஸ் கணினி சேவை – தாவடி.

சாயி மார்க்கம் பற்றி

- கடைசியாக வெளிவந்த **சாயி மார்க்கம்** ஒக்டோபர் - டிசம்பர் 2001, எடியூகெயர் விசேட இதழாகும். (மலர் 8, இதழ் 25).

- நீண்ட இடைவெளியின் பின் ஜனவரி -செப்டெம்பர் 2002 இதழாக (மலர் 9, இதழ் 26) இதனை வெளியிடுகின்றோம். அதாவது இரு இதழ்கள் வரவில்லை.

- இதழ்கள் வெளிவராததற்குக் காரணம் முற்றாக 'தவிர்க்க முடியாத' காரணங்கள் அல்ல. தவிர்த்திருக்க வேண்டிய காரணங்களும் உண்டு.

  அதற்காக சாயி மார்க்கத்தின் வாசக அன்பர்களிடம் இதயபூர்வமாக மன்னிப்புக் கோருகிறோம். பகவானுக்கு என்ன காரணம் கூறுவதென்றே தெரியவில்லை.

- அடுத்த இதழ், ஒக்டோபர் - டிசம்பர் 2002 (மலர் 9, இதழ் 27) உரிய நேரத்தில் வரும்.

- சாயிமார்க்கம் இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின் உத்தியோகபூர்வமான தமிழ் இதழ். அது ஆங்கில **SAI MARGA,** சிங்கள சாயி மார்க ஆகியவற்றுக்கு நிகரானது. ஆனால் அவற்றின் மொழிப் பெயர்ப்பு அல்ல. எமது நிலையங்களின் நிகழ்வுகளையும், வாசகர்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் தாங்கி வருவது சாயி மார்க்கத்தின் கடமையாகும்.

- தமிழில் வழிபாடு நடாத்தும் நிலையங்கள் தமது நிகழ்வுகளை சுருக்கமாக எழுதி அனுப்புமாறு வேண்டுகிறோம். எஜுகேர், பாலவிகாஸ், இளைஞர் சேவை போன்ற சகல விடையங்களையும் சாயி மார்க்கம் பிரசுரிக்க விரும்புகிறது.

- சாயி இலக்கியங்களைப் படிப்பது சாயியின் கோட்பாடுகளில் முக்கியமான தாகும். அந்த இலக்கிய வரிசையில் சாயி மார்க்கம் முன்னின்று சாயியின் உபதேச மணிகளையும், வழிகாட்டும் ஆணைகளையும் தகுந்த முறையில் பக்தர்களுக்குத் தரவேண்டும். எதிர்காலத்தில் இங்கு சேவையை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் செய்வதற்கு பகவானின் பெரும் கருணையை வேண்டி பிரார்த்திக் கின்றோம்.

- ஒரு பத்திரிகைக்கு எவ்வளவு சந்தாதாரர்கள் சேருகிறார்களோ, அந்த அளவிற்கு அது பலம் அடையும். அல்லாவிடில் பணப்பிரச்சனையால் பத்திரிகையை வெளியிடுவது கஷ்டமாகும். ஒரு ஆன்மீக இதழானாலும் சாயி மார்க்கம் இதற்கு விதிவிலக்கல்ல. ஆகவே, உங்கள் இந்த ஆன்மீக இலக்கிய இதழின் ஒரு வருட, இருவருட சந்தா எடுக்கும்படி வேண்டுகிறோம்.

- சாயி இளைஞர் பிரிவைச் சேர்ந்தவர்கள் இந்த வேண்டுகோளை பெரியோருக்குத் தெரிவித்து, சந்தா சேகரித்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ஜெய் சாயிராம்.

ஆசிரியர் குழு

ஒரு வேண்டுகோள்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையங்கள் தமது நாளாந்த நிகழ்வுகளை எமக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

அன்பு வாரச் சிந்தனை

அன்புடன் கண்களால் பாருங்கள்.
அன்புடன் காதுகளால் கேளுங்கள்.
அன்புடன் கரங்களால் கருமமாற்றுங்கள்.
அன்பான எண்ணங்களை எண்ணுங்கள்.
அன்பான வார்த்தைகளை பேசுங்கள்.
ஒவ்வொரு நாளத்திலும் அன்பை உணருங்கள்.

பாபா.

SEE WITH THE EYES OF LOVE
HEAR WITH THE EARS OF LOVE
WORK WITH THE HANDS OF LOVE
THINK THOUGHTS OF LOVE
SPEAK EVERY WORD WITH LOVE
FEEL LOVE IN EVERY NERVE

BABA.

இப்பக்க அன்பளிப்பு:

காலஞ்சென்ற எமது தந்தையார்
தாமோதரம்பிள்ளை செகராசசிங்கம் அவர்களின்

ஞாபகார்த்தமாக
திருமதி. சாந்தநாயகி இராசேந்திரம்

தலைவி,
துன்னாலை சாயி பஜனை நிலையம்,
தாமரைக் குளம் முன்பாக,
துன்னாலை, கரவெட்டி.